"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி — கார்த்திகை — மார்கழி 1997

"பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் 20ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழ்"













லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00



ஜேர்மன்
நாட்டைச்
சேர்ந்த
அருள்மிகு
குறுஞ்சிக்
குமரனின்
தேர்த்திரு
விழாக் காட்சி

ஆசிரியர் : மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர் : திரு. க. ஜெகதீஸ்வரன்

நிர்வாகப்பொறுப்பு: திரு. வ. இ. இராமநாதன் துணை நிர்வாகம் : திரு. சிவ. அசோகன்

**நிர்வாகக்குழு:**

திரு. மாணிக்கம் சுரேஷ், திரு. இ. முருகதாசன், திரு. ந. சிவராசன், திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்
திரு சி. அற்புதானந்தன், திரு.பொ. சுந்தரலிங்கம், Dr.ந. நவநீதராஜா, திரு.இ. சிவானந்தராஜா

வெளியீடு:

**சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா)**

42, Stoneleigh Road, Clayhall, Ilford, IG5 0JD, England
Tel: 0181 550 4233

ஈசன்நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்

மணி 5 ஒலி 20

கலசம்
KALASAM

ஐப்பசி — கார்த்திகை — மார்கழி 1997

# ஏன் வளர்ந்தோம் ? எப்படி வளர்ந்தோம்?

ஒரு இனத்தின் இயங்கியல் யதார்த்த வாழ்வு சொந்த மண்ணில் மறுக்கப்படும் போது அவ்வினம் மறுப்புக் கெதிராகப் போராடும் அல்லது புலம்பெயர்ந்து பாதுகாப்பான சூழல் தேடிப் புறப்பட்டு விடும். இப்படிப் புறப்பட்டு வருபவர்கள் பிறகலாசார சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகி விடுகிறது. இந்த நிலையில் பிற இன கலாசார ஊடுருவல் தவிர்க்க முடியாததாகி இனத்தின் எதிர்கால வாழ்வு முறை கேள்விக்குரியதாகிவிடும். இப்படியான இக்கட்டான நிலையில் பிரித்தானிய மண்ணில் தோற்றுவிக்கப்பட்டது தான் சைவ முன்னேற்றச் சங்கம். சமயம்தான் கலாசாரத்தின் பிரதான அடையாளம். இங்கு ஒரு கலாசார யுத்தம் புரிய வேண்டிய தேவை சைவ முன்னேற்றச் சங்கத்தின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது, அல்லது சைவ முன்னேற்றச் சங்கமே அதைத் தன் கைகளில் தூக்கிக் கொண்டது என்று கூறலாம்.

ஆம்! இத்தகு தூய நோக்கோடு நாம் இருபது ஆண்டுகள் வளர்ந்தோம். இந்த வளர்ச்சிப் படிகளில் பல முள்ளுகள், உடைந்த கண்ணாடிகள் பாதைகளில் தூவப்பட்டன.

சிலவேளை முள்ளுகள் குத்தி அழுதிருக்கிறோம்.

சிலவேளை உடைந்த கண்ணாடிகள் வெட்டிக் கதறியிருக்கிறோம்.

அழுதோம் - கதறினோம் - கலங்கினோம். ஆனால் பின்வாங்கவேயில்லை. சைவ முன்னேற்றச் சங்கம் உங்கள் உடைமை அதைக் காப்பது உங்கள் கடமை என்று நாளிலும் பொழுதிலும் கோஷமிட்டோம். வளர்ச்சிப் பாதையிலே பல புதிய புத்திரர்களை சமூகத்துக்குத் தந்தோம். இந்தப்புத்திரர்களில் ஒருவர் தான் கலசம். உலகெங்கும் சைவ ஒளியைப் பரப்பினோம். வாழ்ந்தோம்! வளர்ந்தோம்!

கலசத்தின் இருபதாவது முத்து இது. அதேநேரம் சங்கத்தின் இருபதாவது ஆண்டு நிறைவும் இது. தன்னை உருவாக்கிய வளர்த்த சைவ முன்னேற்றச் சங்கத்துக்கு இவ்விதழ் சமர்ப்பணம் எனும் போது எவ்வளவு பெருமையாக இருக்கிறது.

தமிழர்களே வாழ்த்துங்கள் சைவமுன்னேற்றச் சங்கத்தை! ஒவ்வொருபத்து ஆண்டுகளும் புதிய புதிய சாதனைகளைப் புரிந்து சங்கம் மேன்மேலும் வாழவேண்டும் என்று கலசமும், அதன் ஆசிரியர் குழுவும், வாசகர்களும் சேர்ந்து மனமார வாழ்த்துகிறார்கள்.

- ஆசிரியர் -

# ஓங்கார உருவானவள்

நீங்காத நினைவுடன் நவராத்திரி அனைத்துக்குமாய்
நவதானியம் விதைத்துக் கும்பம் வைத்து
ஓங்கார உருவான உலகின்தாயை ஆதிசக்தியை
ஒலியாய் ஒளியாய் அண்டசராசரமாய்க் கண்டு
பாங்கான முறையில் எவ்வடிவில் வணங்கினும்
பாரின்வளங்கள் அனைத்தும் பெற்றுப்பின்
நீங்காத நித்திய வாழ்வினைப் பெறலாம் அன்னார்க்கு
நீசரும் பகைவரும் பூமியிலே வலர்ஆவர்

அஞ்சாமை வீரம் தாவென்று துர்க்கையை
அன்புடன் அடிதொழுது கேட்டுப்பின்
தஞ்சமென வணங்கி இலக்குமியை இரங்கவைப்பின்
தரணிதரும் திருவெல்லாம் நமக்களிப்பாள்
மஞ்சமென வெண்டா மரையுறை யும்சரஸ்வதியை
மண்டியிடின் மாண்பு நல்கல்வி சொரிந்திடுவாள்
நெஞ்சுருக மூவர்க்கும் நவராத்திரி நோன்பிருப்பின்
நலன் பெருகும் பலன்பெருகும் புகழுமிகும்

வீரமின்றிச் செல்வமின்றிக் கல்வியின்றி எமக்கு
வையகத்தில் வாழ்வுண்டோ பெருமையுண்டோ
ஈரமிகு பரமசிவன் பாதியுருவான வளாய்த்திகழும்
அர்த்தநாரியான ராஜ ராஜேஸ்வரியை
பூரணமாய் புனிதமுடன் நவராத்திரி விரதத்தால்
பற்றோடும் பக்தியோடும் அனுஷ்டித்திடினும்
ஆரமுதான கிருபையைப் பெற்றால் வாழ்வில்
அல்லல் போகும் திருபொழியக் கல்விமிகும்.

**செ. நாகேந்திரன்**

# சைவ முன்னேற்றச் சங்கம்


(பிரித்தானியா)

# 1977 - 1997









## சைவ முன்னேற்றச் சங்கம்
## உங்கள் உடமை, அதைக்
## காப்பது உங்கள் கடமை

# நடந்தோம்! இரந்தோம்! கட்டிமுடித்தோம்!

## (தாய்ச்சங்கத்தின் நடைபாதையில்)

மறைந்தும் மறையாது எம் மனத் திரையில் நின்ற கலா சங்க மணிமண்டபம்! உன்னை மறக்கத்தான் நினைக்கிறேம் மறக்க முடியவில்லையே ஆம்! வெறும் கல்லும் மண்ணும் சீமெந்தும், சுண்ணாம்பும் கலந்து உன்னைக் கட்டியிருந்தால் நீ எம்மிடமிருந்து,கைமாறிய ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே மறந்திருப்போம். ஆனால் உன்னை எம்மவரின் கண்ணீரும் சென்னீரும் மட்டுமல்லாது அன்றாடம் உழைத்துண்ணும் ஏழைப் பாட்டாளி மக்களின் உலைக்கு இடும் பிடி அரிசியும் சேர்த்தல்லவா! தலை நகரில் அரையும் குறையுமாய் வளர்ந்திருக்கும் கட்டடம் போலல்லாது, தங்கள் உடல் உழைப்பையும், ஊதியத்தையும் தந்தல்லவா உன்னை உருவாக்கித் தந்தார்கள். எம் உண்மை தொண்டர்கள். உன் சுவர்களுக்கு உணர்விருந்தால் இதைக் கதை கதைகதையாய் கூறுமே!

மேடும் பள்ளமும் சேறும் சிதையும் நின்று யாருமே நாடாது காடு போல் வளர்ந்திருந்த காணியிலே காண்போர் வியக்க உயர்ந்து வானளாவ வளர்ந்திருக்கும் கட்டிடமே!

உன்னை எம்மிடமிருந்து பிரிப்பதில் சிலர் கொண்ட பெரும் பணி அவர்களுக்கு தற்காலிக வெற்றியைத் தான் தேடித்தந்துள்ளதே அன்றி நிரந்தர நிம்மதியைத் தந்திருக்காது. சங்கச் சரித்திரத்தில் மட்டுமல்லாது தங்கத் தமிழர்களின் சரித்திரத்திலும் தங்களுக்கு ஓர் கறையைத் தானாகத் தேடிக் கொண்டு விட்டார்கள்.

மணி மண்டபமே! நீ உயிரோடு இருக்க, சங்கப் பணியாற்றும் பாலகர்கள் படிக்க இடமினறி வாடகை மண்டபங்களில் கூடி வாடுவதை நீ அறியாய். காலை குளிர் என்றும் கடும் பனி என்றும் பாராது தெருவெல்லாம் சிவ நாமம் ஒலிக்கச் செய்யும் பச்சிளம் பாலர்கள் படுக்க இடமின்றி வீதி ஓரத்திலும் வீட்டு விறந்தையிலும் படும் வேதனையை நீ அறியாய்!

நீதி, நியாயம், சத்தியம் தோற்றதாகச் சரித்திரம் கூறவில்லை காலம் தான் இதற்கு பதில் கூற வேண்டும். ஒன்றை மட்டும் கூறிவிடைபெறுகின்றேன்.

கட்டிடத்தை பறிக்க உதவலாம், காணியைப் பறிக்க உதவலாம். ஆனால் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகொண்டு பணியாற்றும் சங்கத்தின் பெரும் பணியை தடுத்து நிறுத்த எந்தத் தீய சக்தியாலும் முடியாது. இதற்கோர் சான்று இவ் இருபத்தைந்தாண்டு வளர்ச்சி.

நன்றி

வீரகேசரி.

# ★★ STAR MUSIC ★★

*P.S.Ragu*




**247 High St. North,
Manor Park,
London E12 6SJ.**

திரை, இசை
நட்சத்திரங்களின்
புதிய பழைய
திரைப்படப் பிரதிகள்,
வார, மாதாந்த தமிழ்
ஆங்கிலப் பத்திரிகைகளும்,
சஞ்சிகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

***Tamil * Hindi *Malayalam***

***Audio, Video,CD Cassettes & Magazine***

## *Distributors*

***Open 7 days A Week***

11.00am - 11.00 pm

**Tel: 0181 472 6084**

It's Simple with Dimple

# HIRE OF CARS VANS & MINIBUSES


SUPPLIERS OF PRESTIGE & OTHER VEHICLES

SALES - SERVICE -

CRASH REPAIRS, SPECIALISTS IN EXPORTS TO AFRICA, HEAVY & LIGHT COMMERCIALS




**TEL: 0181 205 1200**





16-19 VARLEY PARADE
EDGWARE ROAD
COLINDALE
LONDON NW9 6RR
TEL: 0181-205 1200
FAX: 0181-200 7426

653 HIGH ROAD
NORTH FINCHLEY
LONDON N12 0AA
TEL: 0181-446 8499
FAX: 0181-446 8415




# AYNGARAN ENTERPRISE

# ஐங்கரன் என்ரபிறைஸ்



(WHOLE SALE AND RETAIL)
80 Burlington Road
( Opp DSS Office)
New Malden, Surrey KT3 4NY

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு இன்றே நாடுங்கள். நம்பிக்கை நாணயம் உத்தரவாதம் இவை எமது தாரக மந்திரம். எம்மிடம் இலங்கை இந்திய உணவுப் பொருட்கள் பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஓடியோ வீடியோ சீடீக்கள் யாவும் கிடைக்கும்

**Tel : 0181 942 1561, 0831 823087**

**Fax : 0181 296 8778**

# SAIVA MUNNETTA SANGAM ( UK)

## Community Service Through Hindu Concern

### Registered Charity 292085

**Saiva Munneta Sangam (UK)** The Name "Saiva" refers to the God Siva's(Sivaperuman's) path. 'Munnetta' means to preserve, promote and propagate. 'Sangam' means society. **Parent Body:** Saiva Munnetta Sangam originally started as a branch of its parent body, Colombo SMS, in Sri-Lanka. It was previously called SMS England branch. We are still affiliated to our parent Sangam in Sri-Lanka.

**Inception:** In the middle of the 1970's, a few of the active members of SMS Colombo arrived in England. They had been involved with SMS Colombo for many years, and leaving behind our services to Saiva Samayam(Saivism) was dearly felt. Furthermore, there were no means of worship for such members in this country during that period.

We found ourselves detached from both Tamils and Saivaites, as we lived in a rural part of Essex, namely Wickford. We felt the need to continue our way of worship and life. Although each of us knew in our own way how to go about this, we did not have a temple nor a reason to get together in the name of culture or religion. Religious functions and important cultural dates made us more aware that the way we used to celebrate and follow them in our home land was terribly missed. This need was recognised by a few individuals. This led to the inception of Saiva Munneta Sangam(UK) in 1997 at Wickford, Essex. We agreed to follow our parental body's philosophy and appointed a small committee of five members to carry out our services.

SMS(UK) started to observe the most important religious events, such as Maha Sivarathiri and Navarathiri. We were particular in conducting the special poojas for the four Saints(Nayanmars) who dedicated their lives to Lord Siva. We also took pride in celebrating other important cultural days accordingly. We invited people with the same faith from Brentwood, Billericay and surrounding areas of Essex. These events were usually held in small groups in our friends' homes.

**SMS(UK) now**: Having outlined how things were ninteen years ago, we have understandably progressed a long way. This progression has taken many turns and faced many difficult times . However, the concept of SMS has helped it to go forward in a unique way.

Now SMS is willing and capable of serving any Saiva Family which is in need of any of the multitude of services SMS(UK) offers. In some aspects, we are able to take our services to them, and in others, they are able to come to us.

**Main functions:** Although the six functions listed below do not strictly adhere to the boundaries given, it will be easier for the purpose of explanation to fit these into the given headings.

## Tamil School:

Naalvar Tamil Academy. This is the primary educational arm of SMS(UK). We run classes in Tamil language for children over five. Classes are held during term time on Sunday mornings, at the Little Ilford School premises, Church Road, Manor Park, London. At present , there are over 120 pupils enrolled, spread over six classes.The school also conducts classes in Vocal, Bharatha Natiyam, Religion(Saivaism) and Thevarams. Pupils of the school take the Cambridge 'o' - Level in Tamil Language, at the end of their education.

## Religious activities:

The prayer meetings have been held on a monthly basis every year since the Sangam's inception. In these monthly events, we enable people to come to know the basis of our religion, and especially about the particular celebration. It also allows people to gain a better understanding of our religious practices.

Any children wishing to find out or learn about our religion are given prominence at these events. We are very keen to have closer links with the temples near to us.

## Religious Magazine Kalasam:

A quarterly religious magazine is published by SMS(UK). This medium serves our objectives effectively and efficiently. It has a wide distribution around Europe and other countries. It was formed in 1993 and it continues to grow and expand. There are articles suitable for children as well as adults in every issue.

## Social Services:

SMS(UK)'s main objective is to serve the religious needs of our community. However, it should be emphasised that certain needs of our community are not met by statutory or voluntary bodies of this country. SMS(UK) has recognised these needs and tries to fulfil these within its resources. In particular, we conduct Last Rites according to Hindu Rituals.
SMS(UK) also runs an Elderly Centre where elderly people can get together and participate in various interesting activities.

**சங்கத்தின் 20ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்பிதழாக வரும் இவ் எட்டுப்பக்கங்களின் அச்சுச் செலவை பொறுப்பேற்ற திரு.யாழ்சீலன் அவர்களுக்கு நன்றி.**

**VASAN & COMPANY**

Auditors & Accountants

Specialists in

* Accounts Preparation
* Book Keeping Services
* VAT, PAYE, Self Assessment
* Tax Planning * Tax Investigation

**78, BECKENHAM ROAD , BECKENHAM**
**KENT BR3 4RH**
**TEL: 0181 658 8867 FAX: 0181 658 8177**

# இவர்களின் பார்வையில் சங்கம்

லண்டன் மாநகரில் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்து வரும் தொண்டு அளப்பரியது. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் இலங்கையிலும் அதன் கிளை பிரித்தானியாவிலும் வரலாறு காணாத தொண்டு புரிந்து வருவதை அறிந்து பெருமை கொள்கின்றோம். அவர்களைப் பாராட்டுகின்றோம். வாழ்த்துகின்றோம். கொழும்பு அருள் மிகு சிவசுப்பிரமணிய ஆலயத்தில் இவர்கள் கட்டி எழுப்பிய இராஜகோபுரம் லண்டனில் நீங்கள் அனுப்பிய காண்டமணி இவை அனைத்தும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியன.

**வாழ்க சைவத்தொண்டு!! வாழ்க தமிழ்த் தொண்டு!!!**

- கே.கே. சுப்பிரமணியம், இலங்கை

இன்று வைகாசிமூலம் திருஞானசம்பந்தர் குருபூஜையைச் சைவ முன்னேற்ற சங்கம் மிக அற்புதாமாகக் கொண்டாடியது நானும் கலந்து கொண்டு மகிழ்ந்தேன். குழந்தைகள், பெரியவர்கள் அனைவரையும் சமய நெறியில் செலுத்தும் அருள் தொண்டு செய்கிறர்கள்.
நாளும் இவர் தொண்டு நற்தமிழ்போல் வளர்க .
"மேமைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்"
அன்புடன் சரசுவதி இராமநாதன்.

கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கத்தின் சிறப்பான சமுதாயப் பணிகள் அனைவரையும் இலங்கையில் கவர்ந்துள்ளது. இன்று சைவ முன்னேற்றச் சங்கத்தின் லண்டன் கிளையின் தமிழ் பாடசாலைக்கு சென்று ஆசிரியர்களையும் மாணவ மாணவிகளையும் சந்தித்தேன். எனது லண்டன் விஜயத்தின் பயனாய் தொடர்புகள் வலுப்பட்டு லண்டன் தமிழ் அமைப்புகளுக்கும் இலங்கைத் தமிழ் சமய நிறுவனங்களுக்கும் செயல்பாடுகளுக்குமிடையில் பிணைப்புகள் அதிகரிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்.

பி.பி. தேவராஜ்
ராஜாங்க அமைச்சர், இலங்கை

சைவ முன்னேற்றச் சங்கம் இங்கிலாந்தில் வாழுகின்ற தமிழ்ச்சமுதாயத்திடை இறைசிந்தனைகளையும், அறஉணர்வுகளையும், வளர்ப்பதிலும், சமுதாய சேவையின் வாயிலாக சமயத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதிலும், அரியதொரு தொண்டு செய்து வருவதை காணுகின்ற வாய்ப்பைப் பெற்றமை குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்தொண்டும், இளைஞர் முன்னேற்றமும் வளர்ந்துவர என் வாழ்த்துக்கள் .

தி.சி. மோகன்.
அண்ணாமலைப்பல்கலைக்கழகம் தமிழ்நாடு

பிறந்த நாட்டைக் கடந்து வந்து வாழ்ந்தாலும் சைவத் தமிழ்ப் பண்பாட்டை மறக்கமால் வளர்க்கும் யாழ்ப்பாணத்து சைவத்தமிழ்ப் பெரு மக்களின் சைவத்தொண்டு நெஞ்சில் நெகிழ்ச்சியைத் தருகிறது.

நன்றி கடமைப்பாடு இன்பஅன்பு!
தவத்திரு குன்றக்குடிஅடிகள்.

சிறுவர் முன்னேற்றத்திற்கும், சமயப்பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவும் இச்சங்கம் மேலும் வளர இறை அருள்க.

- வரதா சண்முகநாதன்.

சைவம் தழைக்கச்செய்த சமயகுரவர்கள் நால்வா் வழி நின்று ஈழத்தில் பலசமயத்தொண்டு செய்த சைவ முன்னேற்றச் சங்கம் ஈழத்தோடு நில்லாமல் இங்கிலாந்து நாட்டில் சைவமும், தமிழும் தழைத்தோங்கச் செய்து வருகிறது. சமயப்பணியும் செய்து வருவது மிகவும் போற்றுதலுக்குரியது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் மேலான சமய, சமுதாயப் பணி மேன்மேலும் சிறக்க இறைவன் திருவடிகளைப் போற்றித் துதிக்கின்றேன்...

அன்பான
திருமுறைப்பணியாளன்
சோ. முத்துக்கந்தசாமிதேசிகர், தமிழ்நாடு.

சைவ சமய உண்மைகளை நடைமுறை வாழ்வில் பின்பற்றும் வண்ணம் அமைந்த இந்த இல்லத்தில் நடைபெற்ற திருஞானசம்பந்தர் குரு பூசையில் கலந்து கொள்ளும் பேற்றுக்கு எல்லாம் வல்ல சிவ பரம் பொருளின் திருவடிகளை வணங்குகின்றேன்.

**பேராசிரியர் S. கெங்காதரன்**
**மதுரை, இந்தியா**

அம்பாள் ஆசீர்வாதம் இலண்டன் சைவ முன்னேற்ற சங்கத்தின் திருஞான சம்பந்தர் மூர்த்தி குருபூஜை விழாவில் கலந்து கொள்ள இறைவன் அளித்த வாய்ப்பை எண்ணி பெருமகிழ்வு கொள்கிறேன்.

சமயத்தோடு தமிழ் வளர்க்கும் இவர்களின் தெய்வத்திருப்பணி என்பது நிறைவேறி இறைவன் அருள் கிடைக்கவும் சைவமுன்னேற்ற சங்கத்திற்கான சொந்த இடம் வெகுவிரைவில் அமைய வேண்டியும் எல்லாம் வல்ல காளியம்மனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

ஸ்ரீ அம்பாள் ஆசிர்வாதம்
தி. டி. சாம்பமூர்த்தி சிவாச்சாரியார்.

தமிழையும் எமது சைவ சமயத்தையும் தன் இரு கண்களாகக் கொண்டு இலங்கும் இலண்டன் சைவமுன்னேற்ற சங்கத்தில் பேசும் வாய்ப்பு எனக்கு கிட்டியதைப் பெரும்பேறாக் கருதுகிறேன்.

நம் பண்பாடு ஒளிவிட்டு இலங்கப்பாடுபடும் உங்கள் முயற்சிக்கு என் பாராட்டுகள்.

- அன்பான சாத்தூர்சேகரன்.
துணைவேந்தர், தமிழ்நாடு

சைவ சமய முன்னேற்றச்சங்கம் இளைஞர்களுக்கு தமிழும் சமயமும் கற்பித்து வருவது மிகவும் பாராட்டத்தக்கது. இத்தொண்டு மேலும் மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஏ. சீனிவாசகம்
கோலாலம்பூர்


லண்டன். சைவ முன்னேற்றச் சங்கம் கொண்டாடிய காஞ்சி முனிவரின் 100 ஆவது தின விழாவில் கலந்து கொள்ளும் பேறு பெற்றேன். பிரமிக்கத்தக்க வளர்ச்சி. வாழ்க!!

வித்துவான் க. ந. வேலன்
கொழும்பு


# சங்கமும் நிகழ்வுகளும்




பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணம்



சங்கப் பரிசுச் சீட்டிழுப்பு




10 ஆவது ஆண்டு நிறைவு விழா



"கலசம்" முதலாவது இதழ் வெளியீட்டு விழா



10ம் ஆண்டு நிறைவில் ஒரு காட்சி



"கடவுளின் கண்முன்னால்" நாடகத்தில் ஒரு காட்சி



"பூலோகம் வந்த பாரதியார்" நாடகத்தில் ஒரு காட்சி





"பாஞ்சாலி சபதம்" நாடகத்தில் ஒரு காட்சி


# ஜேர்மனியில் குறிஞ்சிக் குமரன்

ஜேர்மனி அருள்மிகு குறிஞ்சிக்குமரன் ஆலய தேர்த் திருவிழாவில் கடந்த 24-08-97 ஞாயிற்றுக்கிழமை ஐரோப்பாவில் முதல் முதலாக மூன்று சித்திரத்தேர் பவனி இடம் பெற்றது. முதல் நாள் சப்பரத் திருவிழா மிகவும் கோலாகலமாக சிறப்புற நிகழ்ந்தது.

கலியுக வரதனான குறிஞ்சிக் குமரன் ஜேர்மனி கும்மர்ஸ்பார்க் நகரில் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் தெய்வீகக் காட்சி அளப்பரியது. இந்தியாவில் இருந்து தருவிக்கபட்ட மூஷிக, மயில், ரிஷப வாகனங்களின் மீது எம்பெருமான் பவனி வந்த காட்சி கண்கொள்ளாததாக இருந்தது.

எம்பெருமானின் அலங்காரத் திருவிழாவைக் கிரியாஞானஜோதி சிவஸ்ரீ. கணேச. சாமிநாதக் குருக்கள் அவர்கள் ( ஆலய பிரதமகுரு) நடாத்தி வைத்தார். உதவியாக பிரம்ம ஸ்ரீ சோமாஸ் துளசி காந்தசர்மா அவர்களும் சிறப்புறச் செய்தனர்.





# வரலட்சுமி விரதமும் திருவிளக்குப் பூசையும்

**துன்னையூர் ராம் தேவலோகேஸ்வரக் குருக்கள்.**

உலகில் வாழும் ஒவ்வொரு உயிரினங்களுக்கும் எப்படி ஒரு தாய் இருப்பாளோ அதே போல் அண்ட சராசரங்களுக்கும் அன்னையாய் விளங்கும் அம்பிகை தன் அடியவர்களுக்குக் கேட்கும் வரங்களெல்லாவற்றையும் ஒவ்வொரு வடிவம் தாங்கி வாரி வழங்குகின்றாள். அந்த வகையில் சுமங்கலிப் பெண்களுக்கும் கன்னிப் பெண்களுக்கும் மாங்கல்யப் பலன் நிலைக்கவும் மாங்கல்யப் பலன் கிடைக்கவும் மங்கள அருள் வழங்கும் திருநாளே இந்த வரலட்சுமி நோன்பு எனும் புண்ணியநாள். **ஆசாட சிராவண பூர்வபட் ஷ, சுக்கிரவார லட்சுமி கடாட்ஷ சுமங்கலி நாள்** என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது ஆடி அல்லது ஆவணிமாதம் வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமை (பௌர்ணமிக்கு முதல்வரும் வெள்ளி) சுமங்கலிப்பெண்களும் கன்னிப் பெண்களும் ஆசார சீலராய் மஹா லக்ஷமியை நினைந்து நோன்பு இருந்து மங்கள பலாபலன் பெறும் நன்நாளாகும்.

நாம் நினைத்தவுடன் எப்படி மஞ்சள் மாவிலும் பசும் சாணத்திலும் சந்தனத்திலும் தர்ப்பையிலும் கூம்பாக அமைத்துப் பிள்ளையாரை வழிபடு கின்றோமோ அதேபோல் எந்தவிதமான விளக்கை எடுத்தாலும் அதில் மகாலட்சுமி சானித்தியம் உண்டு என வழிபாடாற்றுகின்றோம். எனவேதான் பௌர்ணமித் தினம், சுக்கிரவாரம், வரலக்குமி தினம், நவராத்திரி தினம் என மங்களகரமான, நிறைந்த நாளில் திருவிளக்குப் பூசை செய்வதை மரபாகக் கொண்டு வருகின்றோம். இந்தத் திருவிளக்கில் பலவிதமான தத்துவங்கள் உண்டு. விளக்கின் மேற்பாகத்தில் கூம்பாக இருக்கும் பகுதி பிரணவப் பொருளான விநாயகப் பெருமான் சானித்தியத்தையும் அடிப்பாகம் தாமரைமலர்போல் அகன்று இருப்பது, நான்முகன் சானித்தியத்தையும், நடுப்பாகமான தண்டுப்பகுதி மூன்றடி மண்கேட்ட வாமனனுக்கு பூமியிலும் ஆகாயத்திலும் தனது விஸ்வரூபம் தொடும்படி காட்டி நின்ற நாராயணனின் சானித்தியத்தையும், மேல்பாகமானது ஈசான, தற்புருஷ, அகோர, வாமதேவ, சத்தியோஜாத எனப்படும் ஐந்து முகங்களையும் காட்டுகின்ற ஈசனின் சானித்தியத்தையும் அழகாக எடுத்தியம்புகின்றது. விளக்கில் எரியும் தீபச் சுடரிலே மூன்று தேவிகளின் அம்சத்தையும் அழகாகக்காணலாம். தீபச் சுடர் எரியும்போது உற்று நோக்கின் சுடரின் மேற் பாகத்தில் ஞானோதயமான வெண்மையான தன்மை தெரியும். இந்தத் தன்மை உற்றுநோக்கும் போதுதான் தெளிவாகத் தெரிகின்றது. இது ஞானமயமான கல்விக் கலையரசி சரஸ்வதிதேவியின் சானித்தியத்தையும் மங்களகரமான மஞ்சள் நிறத்திலே தெரியும் சுடரானது, இருள் நீக்கி ஒளி தரும் மஹாலட்சுமியின் சானித்தியத்தையும் காட்டுகின்றது. எரியும் தீபச் சுடரிலே கையைத் தொட்டுப் பாருங்கள். சுட்டெரிக்கும் இந்தத் தன்மை அகோர வீரத்தன்மை உடைய துர்க்கா பரமேஸ்வரியின் தன்மையையும் சானித்தியத்தையும் எடுத்தியம்பு கின்றது.

இத்தனை தெய்வங்களின் சானித்தியம் உடைய திருவிளக்கை அலங்கரித்துத் தீபச் சுடர் ஏற்றிப் பூசை செய்யும்போது அஷ்ட ஐஸ்வர்யங்களும் எமக்குக் கிடைக்கின்றது. அதிலும் மஹாலட்சுமியின் நோன்பு தினமான வரலட்சுமி விரத நன்நாளில் இந்தத் திருவிளக்குப் பூசை செய்வது மிகவும் சிறப்பானது. இருளை நீக்கி இவ்வுலகமெங்கும் பூரணசந்திரன் எப்படி ஒளிதருகின்றானோ அதேபோல் அம்பிகை அருள் தருகின்றாள். இதை ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தில் **சந்திரமண்டல மத்தியஸ்தாயை நம ஹ** என்று கூறப்பட்டிருக்கிறது. கருணையும் அன்பும் மங்களமும் அன்னை பராசக்தியிடம் பூரணமாக நிறைந்தி ருக்கின்றது. இதை அபிராமி பட்டர் மிக அழகாகக் கூறுகின்றார்.

*மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த*
*அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்*
*பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே*
*பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்தபின்னே*

இதன் பொருளானது– சுடர்விடும் மாணிக்கமே. மாணிக்க மணியிலே ஒலிக்கும் ஒளியே. ஒளிதரும்

மாணிக்கங்களின் ஆபரணமே! ஆபரணங்களுக்கு எழிலூட்டும் எழிலே! உன்னுடைய பாதம் தொழாதவருக்குத் தொடர்ந்துவரும் துன்பமே! தொழுபவனுக்குப் பிறவிப் பெரும் துன்பத்தை அகற்றும் மாமருந்தே! தேவர்களுக்குப் பேரின்பம் அளிக்கும் அன்னையான உன் தாமரை மலர்ப் பாதங்களைப் பணிந்து வணங்கிய பின் எவரையும் வணங்க மாட்டேன் என அழகாகக் கூறுகிறார்.

இனிய இன்ப நலன்கள் நல்கும் ஸ்ரீ வரலட்சுமி நோன்பில் நாமும் திரிகரண சுத்தியுடன் மாயவன் மார்பில் மங்களமாய் உறையும் மஹாலட்சுமியை மனமாரப் பிரார்த்தித்து மங்களம் பெற்றுய்வோமாக.



*With Compliments*

**K. R. GIFT SHOP**

உங்கள் தேவைகளான
இந்தியன் எவர் சில்வர் பாத்திரங்கள்
வீட்டுப்பாவனைப் பொருட்கள்
பூசைத் திரவியங்கள், திருமணப்
பரிசுப் பொருட்கள், வாழ்த்து
மடல்கள், இந்தியப் புத்தகங்கள்
போன்ற பொருட்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**K.R. GIFT SHOP**
378 ROMFORD ROAD
LONDON E7 8BS
**TEL: 0181 470 0486**

**EDGWARE PHYSIOTHERAPY CLINIC**

Specialised in
Sports injuries
Run by
an experienced
Chartered
Physiotherapist



**KANESH NATHAN**
*Ph.d, M.C.S.P S.R.P*
**10 The Drive**
**Edgware**
**Middlesex HA8 8PT**

**TEL : 0181 958 9820**
**FAX: 0181 958 1244**

# அன்னையின் வடிவங்கள்

பரம்பொருள் உருவமும் பெயரும் அற்றது. பேரறிவாகவும், எப்பொழுதும் எங்கும் எதிலும் ஊடுருவி நின்று அனைத்தையும் இயக்கும் ஆற்றலாகவும் உள்ளது.

அறிவும் ஆற்றலும் இணைந்ததே பரம்பொருள். அறிவு சிவன். ஆற்றல் சக்தி. அறிவு சதாசிவமாகவும், பரமசிவமாகவும், தந்தையாகவும், ஆற்றல்–பராசக்தியாகவும், ஆதிசக்தியாகவும், அன்னையாகவும் வழிபடப்பெற்றது.

சௌந்தர்ய லகரியில் ஆதிசங்கரர் பராசக்தியை, உலக அன்னை, பனிமலை அரசன் மகள், பரமசிவன் பத்தினி, உமை, சிவை, ஆதியும் அந்தமும் இல்லாதவள், பவானி, பார்வதி என்றெல்லாம் அழைக்கின்றார்.

அன்னை பராசக்தியே, கன்னியாகுமரியில் குமரியாகவும், காஞ்சிபுரத்தில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும், நெல்லையில் காந்திமதியாகவும், திருக்கேதீச்சரத்தில் கௌரியாகவும், மயிலாப்பூரில் கற்பகாம்பாள் ஆகவும் இன்னும் பற்பல ஊர்களில், பற்பல பெயர்களுடனும் காட்சி தருகின்றாள்.

பராசக்தி, பார்வதி, துர்க்கை, திருமகள், கலைமகள், காளி, பவானி, புவனேஸ்வரி, இராஜராஜேஸ்வரி, லலிதா மகா திரிபுர சுந்தரி எனப் பல்வேறு வடிவங்களில் பல்வேறு பெயர்களுடன் இருப்பவள் அன்னையே.

## லலிதா மகாதிரிபுர சுந்தரி

லலிதா எனில் அழகு. திரிபுரம் எனில் அறிபவள், அறியப்படும் பொருள், அறிவு என்ற மூன்றும். சுந்தரி எனில் அழகி. மாதுளம்பூ நிறத்தாள். கைகள் நான்கு உடையாள். இடது பின் கையில் பாசம், வலது பின் கையில் அங்குசம் கொண்டுள்ளாள். ஆசையை அடக்கப் பாசம். குரோதத்தை அடக்க அங்குசம். பாசம் இச்சா சக்தி. அங்குசம் ஞானா சக்தி.

முன் இடது கையில் கரும்பு. முன் வலது கையில் ஐந்துவித மலர்கள். கரும்பு உள்ளத்தையும், மலர்கள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து புலன்களையும் குறிக்கும். வில்–அம்பு கிரியா சக்தி.

மாணிக்கம், வைரம் புனைந்த முடி, ஞான ஒளி, முக்கண்கள், நறுமணக்கூந்தல், கஸ்தூரிப்பொட்டு, புன்னகை தவழும் முகம், பருத்த தனங்கள், செந்நிறப்பட்டாடை, ஒளி தரும் அணிகலன்கள்.

தன்னை வழிபடுவோர் அகத்திருள் போக்குவாள். அறம், பொருள், இன்பம், வீடு நான்கையும் தருவாள்.

## துர்க்கை:

திருமாலின் சகோதரி துர்க்கை. திருமாலைப் போன்றே சங்கு, சக்கரம், வில், அம்பு ஆகிய ஆயுதங்களைக் கையில் ஏந்தியவள். சிங்கம் துர்க்கையின் வாகனம். மணிமுடி சூடிய தலையில் பிறைச் சந்திரன் உண்டு. மன்னர்களும் வீரர்களும் துர்க்கையை வழிபடுவர். தன்னைச் சரணடைந்தவர்களின் இன்னலைத் துடைப்பாள். துன்பங்களைப் போக்குவாள்.

நவராத்திரியின் முதன் மூன்று நாட்கள் துர்க்கையை வழிபடும் நாட்களாம்.

## திருமகள்

திருமாலின் சக்தி இலக்குமி. செல்வத்தின் தாய் இவளே. ஒப்பற்ற அழகுடையாள். வெள்ளை முகம். கருத்த தோள்கள். சிவந்த இடை, சிவந்த பாதங்கள் உடையாள்.

காணக்கிடையா மாலைகள், ஆடைகள், அணி கலன்கள் அணிந்தவள். சந்தனப் பூச்சு மேனியள். கவர்ச்சியான தோற்றமும் வனப்புமிக்க இளமையும் செறிந்தவள். தாமரையில் அமர்ந்திருப்பாள். நான்கு யானைகள் எப்பொழுதும் இவளை நீராட்டும். நான்கு கைகளில் பின் இரண்டிலும் தாமரை மலர்கள். முன் இரண்டில் ஒன்று அபயகரம் மற்றது வரதகரம் ஆகும். தனலட்சுமி, தானியலட்சுமி என எட்டு வகை இலட்சுமிகள் அஷ்ட இலட்சுமிகள் எனப்படுவர். திருமகளை வழிபடுவோர் பெரும் செல்வம் அடைவர். மேன்மையுடன் வாழ்வர். நவராத்திரி நாட்களில் நடுமூன்று நாட்கள் திருமகளுக்கு உரியன.

## கலைமகள்

பிரம்மாவின் சக்தி சரஸ்வதி. கல்வியின் தாய் இவளே. வெள்ளை நிறமுடையாள். வெள்ளை ஆடை அணிவாள். வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்.

நான்கு கைகளுள் பின் வலக்கையில் மாலை - கல்வியைக் குறிக்கும். பின் இடது கையில் ஏட்டுச் சுவடி-ஞானத்தைக் குறிக்கும். முன் இரு கைகளிலும் வீணையை ஏந்தியுள்ளாள். வீணையின் இசை ஆனந்தத்தினைத்தரும்.- அறிவைக் குறிக்கும். பக்தியோடு கலைமகளை வழிபடுவோர் அனைத்தையும் அறியும் அறிவைப் பெறுவர். நவராத்திரி நாட்களின் இறுதி மூன்று நாட்களும் கலைமகளுக்குரிய நாட்கள்.

## மகாகாளி

பத்துத் தலைகள், பத்துத் தோள்கள் ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள்.

கரிய மேனி, வாயில் தெற்றிப் பற்கள், தொங்கும் நாக்கு, கத்தி, அம்பு, கதை, சூலம், சக்கரம், பாசம், புகண்டி, பரிகம், வில், இரத்தம் தோய்ந்த தலை இவற்றைப் பத்துக் கைகளில் கொண்டவள். செத்த உடல்களால் பின்னிய ஆடை, கபாலத் தலையணி அணிந்திருப்பாள். உலகின் அழிவுச் சக்தி இவளே. போர், கிளர்ச்சி என்பனவும் இயற்கை அழிவுக் காரணிகளான புயல், பூகம்பம், எரிமலை, வெள்ளம், தொற்று நோய் போன்ற அனைத்து அழிவுக்கும் இவளே இறைவி.

### ஆயுர்வேதம்

ஆயுர்வேதம் என்பது ஆயுள் விருத்திக்கு வழி சொல்லும் சாத்திரம். ஆயுள் குறைவது அநேகமாக வியாதியால்தானே? ஆகையினால் வியாதி வராமல் தடுக்கவும், வந்தால் குணப்படுத்தவும் வழிசொல்லும் வைத்ய சாஸ்திரமே ஆயுர்வேதம் எனப்படுகிறது. ஆயுர்வேதம் தீர்க்காயுசோடும் அப்படி இருக்கிற வரையில் சரீர சௌக்கியத்தோடும் இருக்கும் வழிகளைச் சொல்லும் வைத்ய சாஸ்திரமாகும். அதாவது நம் ஆயுளைத் தீர்க்கமாக்கிக் கொள்வதற்கும், சரீரத்துக்குவரும் வியாதிக் கஷ்டங்களைக் குறைத்துக் கொள்வதற்கும் மார்க்கத்தைச் சொல்ல இது ஏற்பட்டிருக்கிறது.

*-காஞ்சிப் பெரியவர்*


## கலசம் சந்தாப்படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையைத் தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். இத்துடன் அதற்கான ( பவுண்கள்) பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

Name:.........................................

Address:.........................................

.........................................

.........................................

**UK & Europe- £10.00 Only**
**Others- £14.00 Only**

**NO STAMP NEEDED- WE PAY THE POSTAGE**

KALASAM
FREE POST
3, THE ORCHARD
WICKFORD
ESSEX, SS12 9BR

# எங்கள் தமிழ் மண்ணில் எத்தனை ஆலயங்கள்

**கருப்பையடி அம்மன்கோவில்**
கரணவாய் தெற்கு கரவெட்டி

**வீரகத்திப் பிள்ளையார் கோவில்**
கப்புதூர், கரவெட்டி

**மாலைசந்தி, ஸ்ரீ வரதராயவிநாயகர் கோவில்**
அல்வாய் தெற்கு அல்வாய்

**ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் கோவில்**
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

**வெல்லம் விநாயகர் கோவில்**
கரவெட்டி மேற்கு கரவெட்டி

**புதுக்குளம், கூரைப் பிள்ளையார் கோவில்**
அல்வாய் தெற்கு அல்வாய்

**தச்சன்தோப்பு சிந்தாமணிப்பிள்ளையார் கோவில்**
தச்சன்தோப்பு, கரவெட்டி

**ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்**
உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலைச்சந்தி
உடுப்பிட்டி

**மாணிக்கப்பிள்ளையார் கோவில்**
வதிரி, கரவெட்டி வடக்கு, கரவெட்டி

**அல்வாயூர் அரசடி விநாயகர் கோவில்**
அல்வாய் வடக்கு, அல்வாய்

**கும்பவாளி வீரகத்தி விநாயகர் கோவில்**
இமையாணன், உடுப்பிட்டி

**கற்பக விநாயகர் கோவில்**
சமரபாகுதேவன் குறிச்சி, உடுப்பிட்டி

**பூவர்க்கரைப் பிள்ளையார் கோவில்**
வதிரி, அல்வாய் தெற்கு, அல்வாய்

**வெற்றிகாட்டுப் பிள்ளையார் கோவில்**
முள்ளிப்பகுதி, கரணவாய் தெற்கு கரவெட்டி

**மாடந்தை வீரகத்தி விநாயகர் கோவில்**
வல்வெட்டி, வல்வெட்டித்துறை

**வல்லியானந்தப் பிள்ளையார் கோவில்**
துன்னாலை வடக்கு, கரவெட்டி

**கனகரத்தினப் பிள்ளையார் கோவில்**
வதிரி, கரவெட்டி

**குமிழடி விநாயகர் கோவில்**
அல்வாய் தெற்கு, அல்வாய்

**தில்லையம்பலப் பிள்ளையார் கோவில்**
அல்வாய் தெற்கு, அல்வாய்

**சித்தி விநாயகர் கோவில்**
வல்லைவெளி உடுப்பிட்டி

**விநாயகர் கோவில்**
கிழவி தோட்டம், கரவெட்டி கிழக்கு

**கலட்டிப் பிள்ளையார் கோவில்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி

**ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவில்**
அல்லையம்பதி, துன்னாலை வடக்கு

**உபய கதிர்காமக் கோவில்**
புலோலி தெற்கு, புலோலி

**நுணுக்கம்பாவனைக் கந்தசுவாமி கோவில்**
கரவெட்டி

**தென் கருணையூர் அருள்மிகு முரு கையா கோவில்**
தச்சன்தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி

**முதலைக்குழி கந்தசுவாமி கோவில்**
கரணவாய் தெற்கு, கரவெட்டி

**நுங்கோடை முருகன் கோவில்**
கரவெட்டி மேற்கு, கரவெட்டி

**அந்திரான் முருகமூர்த்தி கோவில்**
கன்பொல்லைவீதி, கரவெட்டி

**முத்துக்குமாரசுவாமி கோவில்**
காளையந்தோட்டம், வதிரி, கரவெட்டி

**ஸ்ரீ பாலசுப்பிரமணியர் கோவில்**
துன்னாலை தெற்கு, கலிகை, கரவெட்டி

**ஸ்ரீ முருகமூர்த்தி, காளியம்மன் கோவில்**
மத்தியமகா வித்தியாலய வீதி
நெல்லியடி, கரவெட்டி

**வெள்ளெருவை ஞானவைரவர் கோவில்**
அல்வாய் தெற்கு, அல்வாய்

**சொக்கற்கலட்டி முத்துமாரியம்மன் கோவில்**
வாணக்குடியிருப்பு, புலோலி மேற்கு
பருத்தித்துறை

**ஸ்ரீ வீரபத்திர பத்திரகாளி அம்மன் கோவில்**
தல்லையப்புலம் கரவெட்டி

**ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோவில்**
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி

**சிவன் கோவில்**
செட்டியார் தோட்டம், உரும்பிராய்

**ஸ்ரீ நடராஜ ராமலிங்க சுவாமி கோவில்**
புத்தூர் மேற்கு, புத்தூர்

## கோப்பாய் உரும்பிராய் பிரதேச கோயில்கள்

**ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத வைத்தீஸ்வரசுவாமி கோவில்,**
இருபாலை, போப்பாய்

**ஸ்ரீ பறுவதப்பத்தினியம்மன் கோவில்**
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்

**சிவகாமியம்மன் கோவில்**
வல்லையப்புலம், சிறுப்பிட்டி மத்தி
நீர்வேலி

**காமாட்சியம்மன் கோவில்**
நீர்வேலி, கோப்பாய்

**ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவில்**
நீர்வேலிமத்தி, நீர்வேலி

வெள்ளெருவை, பிள்ளையார் ஆகாவில்
கோப்பாய் வடக்கு


PRASAD SWEETS

புதிதாகத் தயாரிக்கப்பட்ட
காரமான — இனிப்பான
தின் பண்டங்கள்
99p/lb இலிருந்து கிடைக்கும்

சகல நிகழ்ச்சிகளுக்கும் எம்மை நீங்கள் அணுகலாம்
£1.60p per plate.

Always
Fresh & Best

168, Upper Tooting Road, London SW17
Tel: 0181 682 3363

222 Ealing Road, Wembly, Middlesex
Tel: 0181 902 1704








“ மயன் மகள் ”
நற்செள்ளை எழுதும்
ஈழத்தின் சரித்திர நவீனம்
கலசத்தின் தைத்திங்கள்
மலரில் ஆரம்பமாகின்றது.


# இறைவா நீ எங்கு சென்றாய்?











# CHILDREN'S KALASAM

**The following pages contain features and articles for and by children, hence are placed in the middle of the magazine. Children can remove these pages and save them and eventually bind them in the form of a booklet. It is our desire to increase the number of pages in children section from eight to twelve. This depends on the enthusiasm the children show. We welcome views and suggestions from children and parents.**

**-Editor-**

## HOW WELL ADJUSTED ARE YOU?

*JOHN WILLIAMS*

The mentally healthy man accepts temporary defeats as inevitable experience on the path to success. He does not believe that a person is a helpless puppet driven by subconscious instinctual desires and forces. He knows that the conscious mind controls and determines the content of the subconscious, that each of us selects his own goal, that no one , in the words of Tennyson, " walks with aimless feet"

Beyond this, there are certain characteristic attitudes which, to a reasonable degree, are found in any normal, mentally healthy person.

He is able to deal with the demands of life. He does this by attacking problems as they arise. He knows that the problems of tommorow cannot be solved by worrying about them today. This is not to say that he doesn't try to avoid problems before they arise; there is a vast difference between planning and worrying. Problems are never solved by Utopian day dreaming or by running away.He challenges each new obstacle he meets, gives all he has to overcoming it, then is satisfied when he has done his best.

He likes himself. Good mental health and happiness are two sides of the same coin. This does not imply that a well-adjusted person is compleatly satisfied with himself. It simply means that deep down inside he has a healthy self image. You cannot underrate yourself and do creative and satisfactory work. If you hate yourself, you limit your ability and may destroy your physical as well as your mental. He expects to like and trust other people and he assumes that others will like him. He is tolerant of others shortcomings just as he is of his own. He does not try to order people about, and he will not be ordered about himself. He is capable of loving other people, of thinking about their interests and well-being. His friendships are satisfying and lasting.

His emotions don't explode for little or no cause. when he gets angry, his anger is in proportion to what caused to it. He doesn't fly off the handle for unimportant reasons. He experiences fear, hate, jealousy, guilt, worry-but he is not overcome by any of them.

He plans for the future. He attempts to mould it to his own size. He does not know what will happen any more than anybody else does, but he does not fear the unknown. He knows that change is part of life, and he welcomes it. By planning for the future he can make his own deny.

He makes his own decisions, then accepts responsibility for making them. When he makes a mistake, he acknowledges it. But instead of crying over it he resolves never to make the same error again. He profits by his mistakes.

In short the mentally healthy person does whatever he undertakes to the best of his ability. If the result is not perfect, he doesn't fret but tries to do better next time. He tries for goals he thinks he can achieve through his own abilities. He enjoys life.

# BELIEF

If a man realises what belief is , then that belief itself is his God. There is no life without belief. those who have no belief will be in a confused state. It is the source of all difficulties and losses. they say God will not abandon those have belief in Him. Who is that God? It is only belief in himself that is God.

The grace that you get from meditation is due to the belief you have got on God. You pray to God who is in the idols whose forms to represent the six qualities have been given by the Sages. You think of something in your heart and pray before the idols. The Sages who have the grace of God Know what you want. They create such circumstances that you can succeed in your thoughts and actions. they act from the mental world ( the world that is two stages above us). In that state you get their full grace. When you do any work or start on any errand you pray to God first and then proceed. God will help you in your work if you really have full belief in Him.

The common man thinks why we should become Siddas and Gnanis. It is to guide such man in this world that they have risen to that state by their meditation. they stay in the mental world and form there they guide and help the profane who have belief in them and seek their help.

வர்ண அமைப்பில் உள்ள சிறுவர் பக்கங்களுக்குரிய அச்சுச் செலவு:
*காலம் சென்ற திரு.சயம்புநாதர் வைரமுத்து இரத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாகவும்
* காலம் சென்ற செல்வி. துரைராஜா ரோகினி அவர்களின் ஞாபகார்த்தமாகவும்
மேற்கண்டவர்களின் குடும்பத்தினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டமைக்கு எமது நன்றிகள்.

# TEMPLE WORSHIP

* RITUALS: Rituals are the external way of worship by a devotee who is progressing on the path to God.
* BATHING THE IDOLS: Abishegam shows the devotee that his external physical body should be kept clean. Likewise his internal self by the growing love and devotion of the devotee.
* Bathing the idol with milk , curd,ghee and five nectors shows that as the body is made to feel beautiful and healthy, so the mind also must grow beautiful and good by feeding good thoughts.
* By dressing the idols with beautiful garments - the devotee personifies the beauty of God and in doing this the devotee feels happy.
* In offering garlands and singing beautiful songs of praise, the devotee feels that he is entertaining a great person and he feels greatly honoured and happy.
* The curtain in front of the idol- represents the veil of ignorance that hides the vision of God.
* First one lamp with many lights is shown then lamps with less and less numbers of lights and in the end one lamp with only one light is shown- it shows that the one spirit in one God gives life to the innumerable beings on the earth.
* In the ritual temple worship - the five senses are fed with Divinity.
* Burning of camhor - in the temple and when we pray asking God, I am showing this light before you please let me see you. Light removes darkness - knowledge removes ignorence.
* Maya- is ignorence and darkness. Thus devotees pray " Dear God please remove maya and give me the light of true Knowledge". God has appeared as a great piller of light as told in the scripture stories.
* Breaking Coconut - Ask God - " please break our hard ego/pride and fill us with love and purity"(white coconut kernal inside and the coconut water that flows out when you break the coconut)

# சிறுவர் வரைந்த சித்திரங்கள்





வரைந்தவர்: அருணன். சுந்தரதாசன்

வயது:-9

# SRI RAMAKRISHANA


**CONTINUATION FROM LAST KALASAM**

SRI SARADA DEVI WAS OF 18 YEAR OLD. TO SERVE SRI RAMAKRISHNA SHE CAME TO DAKSHINESWAR. SRI RAMAKRISHNA LOOKED AFTER HER WELL AND TAUGHT HER ALL SPIRITUAL DISCIPLINES





THEY DIDN'T LIVE LIKE ORDINARY HUSBAND AND WIFE. EACH LOOKED AFTER THE OTHER AS GOD. SRI RAMAKRISHNA LOOKED AFTER EVERY WOMAN AS GOD AND SARADA WAS NO EXCEPTION. ONE DAY HE MADE SARADA SIT IN THE PLACE OF DEITY AND WORSHIPPED HER WITH ALL PARAPHERNALIA.

RAMAKRISHNA HAD NO DESIRE FOR WEALTH OR NAME OR FAME. HIS ONE CONCERN TO THINK OF GOD, TALK OF GOD AND LIVE FOR GOD.




GOD HAD COME DOWN IN THE FORM OF SRI RAMAKRISHNA . TO ASSIST HIM MANY CELESTIALS TOO HAD TAKEN BIRTH RAMAKRISHNA NOW BECAME EAGER TO MEET THEMALL. BUT THEY WERE NOT COMING. HE WOULD CLIMB TO THE ROOF OF THE HOUSE AND CRY LOOKING AT CALCUTTA.




SHORTLY AFTER THIS ALL HIS FUTURE DISCIPLES BEGAN COMING ONE BY ONE.

AMONG THE DISTINGUISHED DEVOTEES WHO CAME TO SEE HIM WERE MEN LIKE KESHAB CHANDRA SEN, MAHENDRANATH GUPTA GIRITA, GIRISH CHANDRA GHOSH, BALARAM BASU, NARENDRANATH, RAKHAL ETC, ETC.



# இரண்டு சீடர்கள்

மிக நீண்ட காலத்திற்கு முன்பு தெய்வீகத் தன்மை வாய்ந்த மகரிஷி ஒரவர் இருந்தார். ஒரு சமயம் அவரிடம் மகரிஷி ஒருவர் இருந்தார். ஒரு சமயம் அவரிடம் இரண்டு இளைஞர்கள் வந்து, சுவாமி, நாங்கள் தவம் பழகி ஆத்ம ஞானம் பெற விரும்பகின்றோம். தாங்கள் கிருபை கூர்ந்து எங்களைச் சீடர்களாக ஏற்று அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

மகரிஷி இளைஞர்கள் இருவரையும் தம்முடன் ஆசிரமத்தில் தங்க அனுமதித்தார்.

மகரிஷி தாமாகவே உபதேசம் ஏதாவது தருவார் என்று இளைஞர்கள் காத்திருந்தார்கள். ஆனால் நாட்கள் கடந்தனவே தவிர, மகரிஷி உபதேசம் தருவதற்கு உரிய அறிகுறி ஒன்றும் தென்படவில்லை. ஆகவே, மனம் வருந்திய சீடர்கள் ஒரு நாள் மகரிஷியை அணுகி சவாமி நாங்கள் இங்கு வந்து பல நாட்கள் கடந்துவிட்டன. தாங்களாக உபதேசம் தருவீர்கள் என்று நினைத்து இதுவரையும் காத்திருந்தோம். தாங்கள் தாமதிக்காமல் எங்களுக்கு உபதேசம் செய்து வைக்கவேண்டும் என்று வேண்டினார்கள். மகரிஷி கருணை ததும்ப அவர்களிடம் நல்லது, நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சிவலிங்கம் தருகிறேன். அதை யாருமே பார்க்காத ரகசியமான ஓர் இடத்தில் கொண்டு போய் வைத்துவிட்டு வாருங்கள். பிறகு உங்களுக்குத் தேவையான உபதேசம் செய்து வைக்கிறேன் என்று சிவலிங்கங்களைக் கொடுத்தார். மகரிஷியை வணங்கிவிட்டு, அவர் சொன்னபடியே சிவலிங்கங்களுடன் சீடர்கள் இருவேறு திசைகளை நோக்கப் புறப்பட்டார்கள்.காடு, மேடு மலை என்று சுற்றிய ஒரு சீடன் மனித சஞ்சாரமற்ற ஒரு குகையைத் தேர்ந்தெடுத்து, குரு தந்த சிவலிங்கத்தை ரகசியமாகப் புதைத்து வைத்தான்.

பிறகு சிறிது காலத்திற்குள்ளாகவே அவன் மகரிஷியின் ஆசிரமத்திற்குத் திரும்பி வந்து விவரம் தெரிவித்தான். குருவின் கட்டளையை விரைவில் நிறைவேற்றி முடித்த திருப்தி அவனுக்கு ஏற்பட்டது. மற்றொரு சீடனோ, குரு சொன்ன விதத்தில் சிவலிங்கத்தை வைத்துவிட்டுவர எங்கெங்கோ

சென்று கொண்டிருந்தான். அவன் எங்கு இருக்கிறான், எங்கே போனான் என்ன ஆனான் என்ற செய்தி எதுவும் ஆசிரமத்திற்கு எட்டவே இல்லை.

இவ்விதம் ஒரு வருடம் கழிந்த பிறகு அந்தச் சீடன் மகரிஷியை வந்து வணங்கினான்.

அவர் கொடுத்த சிவலிங்கத்தை அவரிடமே திரும்பிக் கொடுத்து விட்டு சுவாமி! தாமதித்து வந்ததற்கு மன்னியுங்கள். இந்தச் சிவலிங்கத்தை ஒருவரும் காணாத இடத்தில் வைக்க என்னால் இயன்ற மட்டிலும் முயன்று பார்ததேன். ஆனால் தோல்விதான் ஏற்பட்டது. நான் மிகவும் ரகசியமான இடம் என்று நினைத்துப் பல இடங்களிலும் சிவலிங்கத்தை வைக்க முயன்ற போதெல்லாம் என் உள்ளத்திலிருந்து நான் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன் என்று குரல் கேட்பது போலிருந்தது. இப்போதுங் கூட நான் அந்தக் குரலைக் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். அது யாருடைய குரல் ? அவனையும் பார்க்கவெட்டாமல் செய்தால்தான் தங்கள் கட்டளையை நான் உண்மையில் நிறைவேற்ற முடியும். நான் எங்கே சென்றாலும் என்னுடன் வரும் அவன் யார்? அவனை நான் எப்படிப் பார்க்கவொட்டாமல் தடுப்பது? அது காரணமாகவே இந்தச் சிவலிங்கத்தை ஓர் இடத்திலும் என்னால் வைக்கமுடியாமல் போயிற்று. தங்கள் கட்டளையை நிறைவேற்றாத குற்றத்திற்குத் தாங்கள் அளிக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன். என்றான்.

சீடன் அப்படிச் சொன்னவுடனே மகரிஷி அவனை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டு மகனே! நீ உண்மையை உணர்ந்து விட்டாய். தண்டனை தரும்படி கேட்கும்போதே பரிசு பெறும் தகுதி உனக்கு வந்து விட்டது. உன்னுள் சாட்சியாகக் குடி கொண்டிருக்கும் பரம்பொருளை நீ அறிந்து கொண்டு விட்டாய். அவனே ஆத்மா எனப்படுபவன். அவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தி ருக்கிறான். இந்தப் பெரிய உண்மையை நீ உணர்ந்து கொண்டதே உனக்கு உபதேசமாகும். என்றார்.பக்கத்திலேயே விரைவில் சிவலிங்கத்தை வைத்துவிட்டுத் திரும்பிய முதலாவது சீடன் இருந்தான். சிவலிங்கத்துடன் திரும்பிய இரண்டாவது சீடனுக்கும் குருவுக்கும் நடைபெற்ற உரையாடல் அவனுக்கு உண்மையை உணர்த்திப் படிப்பினையைத்தந்தது.

கதையின் கருத்து: இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றான். அவன் இல்லாத இடம் என்று எந்த ஓர் இடமும் கிடையாது.

# WEDDING WITH A COBRA



Once a brahman couple lived happily but the wife: gave birth to a son whose body was that of a cobra. The couple was sad but thought, "It's our child after all and we must bring him up affectionately."

The cobra-son grew young. One day the wife: told her husband, "Now find out a bride for my son".

The brahman said, "Well, you know, he is the cobra;boy. Who'll marry him?”

But she insisted and the husband had to make efforts. Wandering thus he came to a friend's house, and told him, "I am looking for a bride for my son."


The friend said, "Is it so? Well, I have a beautiful daughter and I am prepared to marry her to your son."

The brahman said, "That's right, but my son's body is that of a cobra."

The friend said, "Oh, but now I cannot go back to my words. Let's leave it to her luck."

The wedding was fixed. The wife was happy to see her daughter-in-law. She showered her blessings on the couple and said, "May God bless you, my daughter-in-law!"





The daughter-in-law said, "I hope your blessings will surely bring me happiness."

The cobra-son used to enter into the box at night and sleep there.


One day an amazing thing happened. The bride was suddenly awoke to see a handsome young man in her bedroom. The box was closed.

She was frightened and tried to escape but the young man said, "Don't run away. I'm your husband!"

She said, "How can I believe it?" The young man entered into the box as a cobra, and again he came out as a young man. He said, "Do you want any other proof now?"


She impulsively rushed to the box and burnt it.

The young man said, "Well done, I had a curse and I was to be free from it if somebody spontaneously burnt the box with the cobra in it. As you've done it, I am relieved of that curse now."



The daughter-in-law rushed out and cried, "Mother, your blessings have come true!"

The parents were happy to learn everything.



# வல்லிபுரம் ஆழ்வார் சுவாமிஆலய வரலாறு


## கவிஞர் முருகவே பரமநாதன்

(வல்லிபுரம், புலோலி)


### கோயிலும் குளமும் குலவிடும் நாடு

மனிதகுல வரலாறு இன்று வெகுதூரம் ஆராயப்பட்டு விட்டது. நதிக்கரையிலும் குளத்தை அண்டியும் எப்பொழுது மனித இனம் வாழத்துவங்கியதோ அப்பொழுதுதான் அவனுக்கு ஓய்வும் ஆறுதலும் கிடைத்தது. இந்த ஓய்வும் ஒழிச்சலும் அவனுடைய சிந்தனைகளைக் கிளப்பி, அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தது. கலைகளும் கல்வியும் பிறந்தன. ஆடலும் பாடலும் அவனுடைய பொழுதுபோக்காகி கலைகளாகவே பரிணமித்தன. அந்தக் கலைகள் கூடத் தெய்வீக நிலைக்கு ஓங்கி வளர்ந்தன. அவனுடைய சிந்தனாலோகம் இம்மையையும் கடந்து நின்றது. உலகியலைவிட்டு மெய்யியல் என்று ஒன்று இருப்பதாக உணர்ந்த மனிதன் அந்த உண்மையைத்தேடி வெகுதூரம் -நெடுந்தூரம் நடந்தான். அப்பாலுக்கப்பாலான செம்பொருளைக் காண்பதே அவனுடைய அறிவுலக ஆய்வாய் இருந்தது. அறிவியலும் அழகியலுமவனுடைய இறக்கைகள் ஆகின. அன்றாட வாழ்வில் ஒரு மனிதன் எத்தனையோ தடவை நான், நான் எனக் குளறிக் கொண்டே இருக்கின்றான். நான் என்று சொல்லும் பொருளெது? அதன் உருவம் என்ன? என்பதைப்பற்றி அவனால் தெரிந்து கொள்ளமுடியவில்லை. விளங்காத புதிர்களை விஞ்ஞானத்தின் மூலம் விளக்கிவிடும் விஞ்ஞானியால்கூட காணமுடியாத இந்தப் புரியாத புதிருக்கு மெய்ஞ்ஞானம் விடைகண்டது. நான் யார்?என்னுள்ளம் யார்? என்பதை இலகுவிலே விளக்கும் நெறியான சைவம் நீதி பேசிற்று.

கோயில்களைக் கட்டினான். குளங்களை வெட்டினான். கோயில்கள், கலைக்கும் கலையின் கருவூலமான பக்திக்கும் ஏன் முக்திக்குமே இருப்பிடமாயின. கோயில்களை உருவாக்கியது போலவே குளம்தொட்டு வளம் பெருக்கினான். இக் கோட்டமும் குளமுமே அவனது இருதயமாகவும் மூச்சின் உயிர்ப்பாகவும் இருந்தன. இதனாலோ என்னவோ குளமும் கோட்டமும் அமைத்தவன் குளக்கோட்டு மன்னன் ஆனான். எனவே ஒரு சமுதாயத்தின், ஏன் ஒரு நாட்டின் புராதன நாகரிகத்துக்கு, உறைவிடம் கோயிலும் குளமுமே.

மன்பதைக்கு வசியும் வளமும் அளித்து, பசியும் பிணியும் தீர்த்தன குளங்கள். உயிர்க்குயிரான ஆத்ம ஞானத்தை ஊட்டி வாழ்வில் நிம்மதியையும் நித்திய சாந்தியையும் அளித்தன கோயில்கள். எச்சமயத்தோர்க்கும் இது சம்மதமே. மனிதனுக்கு இருதயமெப்படி முக்கியமோ அவ்வளவு நாட்டுக்கு இன்றியமையாதது நீர்த்தேக்கங்களே. நீரை வயல்களுக்குக் கொண்டு செல்லும் கால்வாய்களே இரத்தநாடிகள். ஜீவ சக்தியையும் பலத்தையும் ஆரோக்கியமான வாழ்வையும் தாங்கிச் சென்று புராதன கிராமங்கட்கு இவைதாம் உயிர் கொடுத்தன என்று ரெஜினால்ட் பரார் என்ற ஆசிரியர் இலங்கையின் பண்டைக்காலக் குளங்களின் மேன்மையை எடுத்துக் கூறியுள்ளார். இந்தக் குளங்கள் கூட ஆலயங்களை அண்டியே அமைந்திருந்தன. மண்ணுலக வாழ்வுக்குத் தேவையான உணவளிப்பன இக் குளங்களே. இவையே கோயில்களோடு அண்டி வரும் புனித தீர்த்தங்களாயின. விண்ணுலக வாழ்வைக் குறிப்பன கோவில்கள் எனவேதான் **திருக் கோவிலில்லாத திருவிலூரும்** என்றார் அப்பரடிகள். **கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையமர்ந்தாரே** என்பது சம்பந்தர் வாக்கு. குளத்தினால் வாழ்வு பெறும் ஜீவன் கோயிலிலே சாந்தி பெற்று விடுதலையடையும். இவ்வாறு சமயமும் சமுதாயமும் ஒன்றிணைந்த நிலையிலே இந்து தர்மமும், அதன் நாகரிகமும் மிகத் தொன்மையானதாகப் பேசப்படுகின்றது. சிந்து வெளி நாகரிகமும் இதற்குச் சான்று பகர்வதாக வரலாற்று வல்லுனர்கள் வரையறுத்துக் கூறியுள்ளனர். இமயம் தொட்டு இந்தோனேசியாவரை கங்கையிலிருந்து மாணிக்ககங்கைவரை இந்துமதம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. ஈழத் தமிழர் இந்நாட்டுப் பழங்குடிமக்கள் மட்டுமல்ல சைவம் கண்ட சமுதாயமும்கூட மறைந்துபோன குமரிக்கண்டம், இந்தியா, இலங்கை என்பற்றை உள்ளடக்கியதாகவும் இருந்தது. சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தில் ஈழத்துப் புலவர்கள் மதுரையிலிருந்து தமிழாய்ந்துள்ளனர். மேலும் சாக்தம் வருவதற்கு முன்னரே சைவம் நிலவியுமிருக்கிறது. இராவணன், மண்டோதரி என்போர் சைவ சமயிகளாய் இருந்து திராவிடப் பண்பாட்டை பேணிக் காத்தனர். மாந்தை என்னும் மாதோட்டம் மாபெருஞ் சந்தையாய் மிளிர்ந்திருக்கிறது. பாடல் பெற்ற தலங்களும், புராதன ஆலயங்களும் நிறையக் காணப்படுவதே ஈழத்தின் தனிச் சிறப்பாகும்.

ஈழம் இயற்கையழகுமிக்க தீவு. பாரத மணித்திருநாட்டின் முத்துப் பதக்கம்போல் அமைந்து கிடக்கிறது. இந்து மகாசமுத்திரத்தின் நுழைவாயிலான இலங்கையை நாடிப் பல யாத்திரிகர்கள் வந்திருக்கிறார்கள். இதற்கு நித்திலத்தீவு என்னும் பெயரும் உண்டு. ஓங்கியுயர்ந்த மலைச்சிகரங்கள், நெளிந்து பாயும் நதித்திரள்கள், காடெல்லாம் கடற் கரையெலாம் பசுமை, நாடெலாம் நதியெலாம் மணிகள். தேயிலையும், தென்னையும், இறப்பரும், கோப்பியும், கொக்கோவும், மிளகும் நம் நாட்டுச் செல்வங்கள். ஆலயங்களுக்கோ குறைவில்லை. தெய்வந்து றையிலிருந்து பருத்தித்துறைவரை, காங்கேசந்து றையிலிருந்து மாத்தறைவரையும் கரையோர மாயமைந்த திருக்கோவில்களே நமக்கு அரண் செய்கின்றன. சைவம் மாத்திரமல்ல பௌத்தமும் ஒன்றிணைந்து வழிபடும் தலங்களும் பலவுண்டு. தென்கோடியிலுள்ள விஷ்ணு தலமான தெய்வந்துறை (தேவிநுவரை) எல்லோராலும் போற்றப்படும் ஸ்தலமாகும். இபின்பட்டுட்டா இத் தலத்துக்கு வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு இலங்கையின் கரையைச் சுற்றியுள்ள பேர்பெற்ற தலங்கள் இந்துக்களாற் போற்றப்படும் ஆலயங்களாகும். இவற்றிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கேயமைந்த சிறந்த ஷேத்திரங்களில் ஒன்று வல்லிபுரம்(ஆழ்வார் ஆலயம்) ஆகும். இதுவும் தெய்வந்துறையைப்போல வடகீழ் கரையில் பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லிபுரம் என்னும் ஊரில் அமைந்திருக்கிறது.

**மூர்த்தியருளும் முறைசேர் தலநலமும்**
**தீர்த்தத் திருநிறைவும் சேருமருட் - கீர்த்திக்கு**
**நல்லவோர் ஆலயத்தை நாடி நான் போற்றுதற்**
**கல்லேனின் றானே னறி**

என்று கருடாழ்வார் தூது தலமகிமையைப் பாடுகிறார். இப்படி இத்தலத்தைப் பற்றிய வரலாற்றை தட்சிணகைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம் என்பவற் றிற் காணலாம். என்றாலும் சிங்கள மொழியிலெழுந்த இலக்கியத்திலும் இவ் வரலாறுகள் உண்டு. சிங்கள மொழியிலே சந்தேச காவியங்கள் என்று கூறுவது தூதுப் பிரபந்தங்களையே. இப் பிரபந்தங்கள் 14ம் நூற்றாண்டின் பின்னரே எழுந்தன. இப் பிரபந்தங்கள் பெரும்பாலும் ஈழநாட்டில் மத்திய காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் வரலாற்றையும் அவர்களின் பழக்க வழக்கங்களையும், சிங்களப் புலவர்களிடையே தமிழ்மொழி பரவியிருந்த தன்மையையும் செவ்வனே எடுத்துக் காட்டுகின்றன. அதுமட்டுமன்றி ஈழத்தின் புராதன இந்துக் கோயில்களைப்பற்றிய குறிப்புகளுமுள. இவற்றிலே செலகினி சந்தேசம(மலைமயினா விடுதூது), கஹகுருலு சந்தேசம (மஞ்சட்குருவி விடு தூது), மயூர சந்தேசம (மயில் விடு தூது),கோகிலவு சந்தேசம (குயில் விடு தூது) என்பன சில. மஞ்சட் குருவி விடுதூது கதிர்காமச் சிறப்பை வியந்து கூறுவதுபோலவே, குயில் விடுதூதும் யாழ்ப்பாணத்திலுள்ள பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலையும், வல்லிபுரக் கோவிலையும் பற்றிப் பாடியுள்ளது. ஆலயத்தின் புராதனத்துக்கும், புனிதத்துக்கும் இஃதோர் சான்றாகும்.

முதலியார் இராஜநாயகமவர்களின் இக் கூற்றை (Ancient Temples of Sri Lanka) ஈழத்தின் புராதன இந்து ஆலயங்களென்னும் நூலில் 57ம் பக்கத்தில் இதன் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகின்றார்.

**" The oldest Temples in Jaffna, dedicated to Rama & Krishna were at Vallipuram and Ponnalai respectively and they are mentioned in the Kohilasandesa"**
**-Mudliyar C. Rasanayagam**


## குடிசையிலிருந்து கோபுரம்வரை.....

ஆதியிலே கோயில்கள் மரத்தின் கீழும் குளக்கரையிலும் ஆற்றோரங்களிலும் அமைக்கப்பட்டன. ஒரு விருட்சத்தின் நிழலே கோயிலாயும், விருட்சம் இறைவடிவமாயும் போற்றப்பட்டது. அப்படியான கோயில்கள் வளர்ந்து குடிசையாயும், கீற்று ஓலைக் கொட்டிலாயும் மாற்றமடைந்தன. மண்ணினாலும் மரத்தினாலும் கட்டப்பட்ட ஆலயங்கள் நாளாவட்டத்தில் வானளாவிய கோபுரங்களின் நிலைக்கு மாற்றமடைந்தன. ஈழத்திலே இராசகோபுரங்களோடு கூடிய ஆலயங்கள் வெகு அருமையாயினும் அண்மைக்காலங்களில் தென்னக மோடியிலே பல இராசகோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சனாதனதர்மமான இந்து தர்மம் ஆறு சமயங்களை உள்ளடக்கியது. அவற்றில் சைவமும் வைணவமும் அடங்குகின்றன. சைவம் சிவ சம்பந்தமானது. வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தமானது. இவ்விரு சமயங்களும் தென்னகத்தில் சிறப்பாகப் பாரத நாட்டில் அனுஷ் டிக்கப்படுகிறது. என்றாலும் ஈழத்தில் சைவமும், சாக்கியமும் கொண்ட இடத்தை வைணவம் பிடிக்காவிட்டாலும் திருமால் வணக்கம் சைவசமயிகளிடமும் பௌத்தர்களிடமும் பெரிதும் இடம் பெற்றிருப்பது கண்கூடு. கண்டியிலே உள்ள விஷ்ணு ஆலயத்தில் சந்தனம் பிரசாதமாய் வழங்கப்படுவதை இன்றும் காணலாம். இவ்வாறு ஏனைய திருமால் ஸ்தலங்களிலும் விபூதி சந்தனம் பெற்ற இடம் சைவ மரபாயிருக்க வல்லிபுரக் கோவிலில் மட்டும் நாமம் இடும் வழக்கம் வைணவ மரபை ஒட்டியதாகும். ஈழத்திலுள்ள

விஷ்ணு ஆலயங்களில் திருமண் இயற்கையாகக் கிடைக்கும் ஷேத்திரம் வல்லிபுரம் ஒன்றேயாகும்.

சைவத் திருமுறைகள் தந்த நாயன்மார் திருமாலைப் பாடியிருக்கிறார்கள். சிவனின் இடப்பாகத்தைக் கொண்டவர் திருமால் என்ற நாயன்மார்களின் கூற்றைப்போல ஆழ்வார்களும் சிவனை வலப்பாகத்தே கொண்ட திருமால் என்று பாடியிருக்கிறார்கள். இவ்வாறு சங்கர நாராயண னாகக் காட்டும் காட்சிக்கு மேலே, விஷ்ணுவைச் சக்தியாகப் பாடிய நாயன்மார்களும் பார்வதியைத் திருமாலின் சகோதரியாகக் கண்ட ஆழ்வார்களும் உண்டு. இத் தத்துவத்தைப் பார்க்கும்போது அரியும், அரனும் ஒன்றே - வேறல்லர் என்ற நிலை தெற்றெனத் தெளிவாகிறது அன்றோ!. சமயாதீதப் பழம் பொருளை ஈழத்துச் சைவப் பெருங்குடிமக்கள் வேறுபாடின்றி வணங்குகின்ற சமரசம் மேலானதே. பாரதத்திலே திருமால் சந்நிதியும், சிவ சந்நிதியும் உள்ள கோயில்கள் பலவுண்டு. கச்சியேகம்பம் (நிலாத்துண்டப் பெருமாள்) சிதம்பரம் ( கோவிந்தராஜப் பெருமாள்) சிக்கல் (கோலவாமனப் பெருமாள்) திருநெல்வேலி ( நெல்லைக் கோவிந்தர்) செந்தூர் (அரங்கநாதன்) திருப்புத்தூர் (இலட்சுமி நாராயணன்) பழனம் (வேணுகோபாலர்) திருநாவலூர் (வரதராசர்) பவானி ( ஆதிகேசவப் பெருமாள்) என்னுந் தலங்கள் அதற்கு இலக்கியமாய்த் திகழ்கின்றன. இவ்வாறமைந்த சந்நிதானங்கள் ஒரே பொருள்தான் விஷ்ணு ஈஸ்வரன், சக்தி என்பதை எடுத்தோதுகின்றன. மாதாய மாலவனை மாதவனை எனப் பாடியிருக்கிறார். திருமழிசை பிரான். **ஒருவன் ஒருவனங்கத்தென்று முளன்.** என்பது பொய்கையாழ்வார் வாக்கு. எனவேதான் வல்லிபுரத்தில் அமைந்த திருமால் சிவவிஷ்ணு என்று அச்சுவேலி பிரம்மஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் குறிப்பிட்டிருக்கிறார்.



திருமால் கோவில்களிலே மூலமூர்த்தி நின்ற கோலத்திலும் கிடந்த கோலத்திலும் அமைந்திருக்கக் காணலாம். திருப்பதி, அத்திகிரி, திருநாவாய் என்னுமிடங்களில் நின்ற கோலமும், ஹம்பி, ஸ்ரீரங்கப் பட்டணம், மாமல்லபுரம், சிங்க புரம், ஸ்ரீரங்கம், திருவனந்தபுரம், என்னுமிடங்களிலே சயன கோலமும் காட்சியளிப்பது போல காஞ்சி வைகுண்டப் பெருமாள் மதுரை அழகர், திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணன் எல்லாம் அமர்ந்திருக்கும் கோலத்தில் அருள் பாலிக்கக் காணலாம். இத்தனைக்கும் குடந்தைச் சக்கரபாணி கோயிலிலே சக்கரத்தாழ்வார் மூல மூர்த்தியாய் இருக்கின்றார். இவ்வாறே வல்லிபுரக் கோவிலில் மூலமூர்த்தி சுதர்சனமே. நெடுநாள் தவம் புரிந்த ஹேம முனிவரின் முன் தோன்றினார் குடந்தைச் சக்கரபாணி. நாக சாபத்தால் வாடிய லவல்லி சிவனருளால் வல்லிபுரத்திற் பிறந்து தவம் செய்தாள். அவள் முன்னே மற்சமாய், மகவுமாய் காட்சியளித்த மாயவனளித்த சக்கரமே வல்லிபுர ஆழ்வாராலயக் கருவறையில் காட்சியளிக்கும் மூலமூர்த்தி. பஞ்சலோகத்தினாலான இத் திருவுருவம் காத்தற் கடவுளின் ஆழியாகும். அம்பஷன் என்ற அரசன் விஷ்ணு பத்தருட் சிறந்தவன். அந்த மகானுபவன் ஏகாதசியன்று சந்தோபவாஸஞ் செய்து, ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரனம் இந்த உபாயங்களால் மகா விஸ்ணுவை ஸவாதீனமாகக் கொண்டு ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். பகவானான விஷ்ணு அவனுடைய மேலான பக்தியைப் பார்த்து அவனுடைய ராஜ்யத்தை ரட்சிப்பதற்காக அந்த ராசனுடைய அரண்மனை வாயிலில் தம் சுதர்சன சக்கரத்தைப் பிரதிட்டை செய்து அந்த மன்னவனை ரட்சித்து வந்ததாகப் புராதன கதைகள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்திலே வேலை ஆவாகனம் பண்ணி ஸ்தாபித்து வழிபடும் முருகன் கோவில்கள் நல்லூரும் செல்வச் சந்நிதியுமாகும். இவை வேற் கோட்டங்களாயமைந்த முருகன் கோவில்களாகும். அவ்வாறே சக்கரத்தை மூலஸ் தானத்தில் ஸ்தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் வல்லிபுர ஆழ்வார் கோவிலாகும். தர்ம சக்கரமான ஆக்ஞான சக்கரம் காத்தலையும், சங்கு படைத்தலையும், கதை அழித்தலையும் தாமரை மலர் அருளலையும் அனந்தாழ்வார் மறைத்தலையும் குறிக்கின்றது. இத் தலத்தோடு தொடர்புடைய குருக்கட்டுப் பிள்ளையார் கோவில் மேற்கேயமைந்திருக்கிறது. தும்பிக்கை யாழ்வாரான கணபதிக்கும் ஆழ்வார் சுவாமிக்குமான பாரம்பரியம் இன்றும் பேணப்பட்டு வருகின்றது. குருக்கட்டுச் சித்தி விநாயகருக்குப் பூசை செய்தபின்தான் வல்லிபுரசுவாமிக்கு ஆதியிலேபூசை நடைபெற்றிருக்கிறது. பட்டுத் தீர்த்தம் எனப்படும் இறுதித் தீர்த்தவிழாக்கூட நெடுங்காலமாக குருக்கட்டுச் சித்தி விநாயகர் கோவிலின்

மேற்கேயுள்ள தீர்த்தக் குளத்திலேதான் நடாத்தி வந்தார்கள். தீராநோய் தீர்க்குமிக்குளம் இன்று கேணியாய் அமைக்கப் பட்டுவிட்டது. இத் திருப்பணியைச் செய்தவர் பொன்னையா வைத்தியராவார்.

## பெரும் பெயர் இறை

திருமால் காத்தற் தெய்வம். பெருமாளிலும் பெரிய பெருமாள் என்பது அருணகிரி வாக்கு. திருமால் முல்லை நிலத் தெய்வமாயும் பாரத நாட்டின்குல தெய்வமாகவும் திகழ்கிறார். வேத காலத்திலிருந்தே திருமால் வழிபாடு நிலைபெற்றுவிட்டமையை இருக்கு வேதம் எடுத்து இயம்புகின்றது. இருக்குவேதத்திற் சிறப்பாக ஆறு சூத்திரங்களில் முழுமையாகப் போற்றப்படுகிறார். அக்கினி இந்திரன் முதலிய தெய்வங்களுடன் திருமாலுக்கு முக்கிய இடம் அளிக்கிறது வேதம். இவ்வாறு வேதங்களாலும் புராண இதிகாசங்களாலும் போற்றப்படும் திருமாலைத் தொல்காப்பியர் முதல் பாரதியார் வரை பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். இதைத் தேசிய வீரர் வ.உ.சி அவர்கள் பாரதியாரின் கண்ணன் பாடலுக்கு எழுதிய முன்னுரையில் **பாரத நாட்டின் குல தெய்வமாகிவிட்ட கண்ணனுக்குப் பாமாலை சூடாத கவிகள் அருமை** என்று குறிப்பிடுகின்றார். ஆதிமுதல் இத்தேதிவரை போற்றப்படும் கண்ணனை முழுமுதற் கடவுளாய் வழிபடுபவர்கள் வைணவர்கள். ஆதிசங்கரர் வைதிக சமயங்க ளாறையும் இணைத்துச் சமயப் பூசலை ஒழிக்க முயன்றார். குலதெய்வமாகக் கொண்டாடும் அளவுக்கு கண்ணன் எல்லார் உள்ளங்களையும் கொள்ளை கொண்டிருக்கிறார். திருமால் பெருமை பேசும் பாகவதம், பாரதம், இராமாயணம், பகவத்கீதை முதலிய தொன்மையான நூல்களை விட சங்க இலக்கியங்களும், காப்பியங்களும் திருமாலைப் பெரிதும் போற்றியுள்ளன. பிள்ளைத் தமிழ் நூல்களிலெல்லாம் காப்புப் பருவத்தில் திருமால் அழகாகப் பாடப்பட்டுள்ளார். **பைந்தமிழ் பின்சென்ற பச்சைப் பசுங்கொண்டலே** என அழகொழுகப் பாடியிருக்கிறார் குமரகுருபரர். பரிபாடலிலும், பரிபாடற்றிரட்டிலும் மொத்தம் ஏழுபாடல்கள் திருமாலைப்பற்றிப்பேசுகின்றன. அப் பாடல்கள் திருமாலின் தத்துவங்களையும் கோவில் கொண்ட ஸ்தலங்களையும் பற்றிச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. முருகனைப் பெரும்பெயர் முருகன் எனத் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் போற்றுகின்றன. அவ்வாறே திருமாலைப் பெரும் பெயர் இறையெனப் பேசுகின்றது பரிபாடல். முல்லைப்பாட்டில் **நனந்தலையுலகம் வளையி நேமியொடு வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை. நீர் செல நிமித்தமா அல்** எனவும், பெரும்பாணாற்றுப் படையில் **காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந்தாங்குப் பாம்பணைப் பள்ளியமர்ந்தோன்** எனவும் மதுரைக் காஞ்சியில் **மாயோன்** எனவும் வரும் தொடர்கள் திருமாலைக் குறிக்கின்றன. தொல்காப்பியர் **மாயோன் மேயகாடுறை உலகமும்** என முல்லை நிலத் தெய்வத்தைப் போற்றுகிறார். கீழ்க்கணக்கு நூல்களிற் திருமாலைப் பாடும் பாவம் நிறைந்த பாடல்கள் பலவுண்டு.

இவ்வாறு மிகத் தொன்மையான திருமால் வழிபாடு இமயம் தொட்டு ஈழம்வரை பரந்துள்ளது. ஈழவள நாட்டில் சைவமும் சாக்தமும் விஷ்ணுவை வணங்கும் ஒருமைப்பாடுடையன. தெற்கே தெய்வந்துறை, கண்டி பெல்லங்குவில, களு போவில, என்னுமிடங்களிலும் கிழக்கே வந்தாறு மூலை மண்டூர், திருப்பழுகாமம், கழுவாஞ்சிக்குடி கிரான், தம்பிலுவில் திருமலை என்னுமிடங்களிலும் விஷ்ணு தேவாலயங்கள் அமைந்துள்ளன.

*நன்றி : ஆத்மஜோதி, 1982*

AARABEE CENTRE

BOOKSHOP AT BHARATIYA VIDYA BHAVAN

* ORNAMENTS * SAREES

*MUSICAL INSTRUMENTS

உன்னதமான கலைஞர்களின் பாட்டு, வாத்திய இசைத் தட்டுக்கள், இசை நாட்டியம் பல்வேறு கலை நூல்கள்

We also buy & sell foreign currencies and remit to overseas Contact: 0171 402 4668

ஆரபி

Rare Classical CD's Audios & Videos (Vocal & Instrumental

Bharatiya Vidya Bhavan
4a, Castletown Road
West Kensington
London W14 9HQ
0171 258 3924




# Satyan *Jewellers*

## வாடிக்கையாளர்களுக்கு எமது மனமார்ந்த தீபாவ ளி வாழ்த்துகள்

**Specialist in 22ct. Gold Jewellery & Diamond**

தரமான நகை தேடி வாருங்கள்
நகையோடு நகை தருவோம் வாருங்கள்
கரமெல்லாம் காப்பதனை அணியுங்கள்
கண்ணாளன் மனங்குளிர வாழுங்கள்
விரலெல்லாம் மோதிரத்தைப் போட்டிடலாம்
வீச்சாக நீர் நடந்து வாருங்கள்
பாரதினில் சிறந்த நகை மாளிகை
சத்தியனின் இடம்வந்து சேருங்கள்

**220 GREEN STREET**
**FOREST GATE**
**LONDON E7 8LF**
**TEL: 0181 471 0564**
**TEL: 0181 470 7056**
**TEL: 0181 503 5379**

KUMARANS

# குமரன்ஸ்
## தமிழ்க்கடை

உங்களுக்குஅன்றாடம்
தேவையான லீலா
தயாரிப்புகளை
மொத்த விற்பனை
விலைக்கு தொகையாக
வாங்கி உங்கள்
பணத்தைச் சேமியுங்கள்

**142, HOE STREET**
**WALTHAMSTOW,**
**LONDON E17 4QR**
**TEL: 0181 521 4955**
**FAX: 0181 521 9482**

லீலா தயாரிப்புகளின்
அங்கீகாரம் பெற்ற
விநியோகஸ்தர்கள்

KUMARANS

# இந்து சமயம்

## க. குணரத்தினம்

## சிறீரமண மகரிஷி

திருவண்ணாமலை முனிவர், சுத்த அத்துவைதத்தின் அவதாரம், நடமாடும் உபநிடதம், மனித வடிவத்தில் வந்துள்ள தனியியல் தன்மையற்ற என்றுமுள்ள தத்துவம், சீவன் முத்தன் என்றெல்லாம் அழைக்கப்பட்டவர் சிறீரமண மகரிஷி. அரை நூற்றாண்டுக்கு மேலாக திருவண்ணா மலையில் அருணாசலம் என்னும் தலத்தில் ஆன்மீகச் சுடர் விளக்காய் அமைந்து தங்கு தடையின்றி ஒளி வீசிக் கொண்டிருந்தார். பல இடங்களிலுமிருந்து வந்த ஆன்மீகப் பயணிகள் இந்த அணையா சோதியினின்று தெறித்து விழும் ஒரு பொறியினை ஏற்று அதனை வளர்த்து அது தங்களுக்கு இறுதியான பேரின்பத்தை அடைவதற்கு வழி காட்டியாக இருக்குமாறு கொண்டு சென்றார்கள்.

ரமணரின் இயற் பெயர் வெங்கட்ராமன். தமிழ்நாட்டில் மதுரைக்கு அருகில் உள்ள திருச்சுழியில் 1879ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் நாள் திருவாதிரை தினத்தன்று பிறந்தார். தாயின் பெயர் அழகம்மாள். தந்தையின் பெயர் சுந்தரம் ஐயர். வழக்கறிஞர் தொழில் பார்த்தவர். மூன்று புதல்வர்களில் இரண்டாவது புதல்வர் வெங்கட்ராமன். சிறு வயது முதல் கல்வியில் இவர் கவனம் செலுத்தவில்லை. ஆனால் மிகவும் புத்திசாலி. ஒரு முறை கேட்டதை அப்படியே ஒரு வார்த்தை கூடப் பிறழாமல் திருப்பிக் கூறும் ஆற்றல் அவரிடம் இருந்தது. நல்ல உடல் வலிமையும் உடற்கட்டும் பெற்றிருந்தார். அவர் வேத பாராயணம் செய்யவில்லை. தந்தையோடு சேர்ந்து அன்றாட பூசைகளை மிகுந்த சிரத்தையோடு வீட்டில் செய்து வந்தார். தொடர்ந்து கல்வி கற்பதற்காக மதுரையில் தாய்மாமன் வீட்டில் மூத்த சகோதரனுடன் தங்கியிருந்தார்.

1895ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 1896ஆம் நடுப்பகு திவரை அவர் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. 1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இவரைச் சந்திக்க வந்த வயோதிப உறவினர் **அடியேன் அருணாசலத்திலிருந்து வருகிறேன்** என்று கூறிய போது அந்த வார்த்தைகள் வெங்கட்ராமனின் உடலையும் மனதையும் தாக்கியது. அருணாசலம் திருவண்ணாமலை என்றறிந்து பேரானந்தம் அடைந்தார். முதன் முதலாக வெங்கட்ராமன் பெரிய புராணம் என்னும் ஆன்மீக நூலைப் படித்தார். அறுபத்துமூவர் ஆன்மீகத் தொண்டாற்றி ஆன்மீகப் பெருவாழ்க்கை வாழ்ந்து மறைந்ததை எண்ணி வியப்பெய்தினார். 1896ஆம் ஆண்டு நடுப்பகுதியில் அவரது பதினேழாவது வயதில் பெருமாற்றம் ஏற்பட்டது.

ரமணரே அம் மாற்றம்பற்றி கூறியுள்ளார். நான் மதுரையை விட்டுப் புறப்படுவதற்கு ஆறு வாரங்கள் இருந்தன. அப்போதுதான் என் வாழ்வில் அந்த மாற்றம் உண்டாயிற்று. அப்போது நான் என்னுடைய உறவினர் வீட்டில் தங்கியிருந்தேன்.


ஒருநாள் திடீரென்று நான் அவ்வீட்டில் தனிமையாக இருந்தேன். நான் நன்றாக அதிக நேரம் உறங்கும் வழக்கம் உடையவன். உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்போது பலர்வந்து பூட்டிய எனது அறைக்குள் புகுந்து என்னைத் தாக்குவதுபோல் உணர்ந்தேன். ஆனால் விழித்தெழுந்து பார்த்தால் என் உடலில் எந்தக் காயமும் இல்லை. மறுநாள் காலை நான் பார்த்தபோது என் உடலில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் சாவைப்பற்றிய எண்ணம் – அதாவது இந்த உலகத்தாரை ஆட்டி வைக்கக்கூடிய மரண பயம் பிடித்திருந்ததை உணர்ந்தேன். நான் உடனே இறந்துவிடப்போவதாக ஓர் உணர்வு என்னை உந்தித் தள்ளியது. என்னுடைய பயத்துக்கான காரணத்தை என்னால் யாரிடத்தும் விளக்க முடியவில்லை. நாம் இறக்கத்தான் போகிறோம் இனி என்ன செய்யவேண்டும் என்பது பற்றிச் சிந்தித்தேன். வீட்டில் யாரிடமும் என்னுடைய சாவைப் பற்றி நான் கூறவில்லை. எனக்கு நானே அந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்தேன்.

மரணம் பற்றிய எண்ணம் என்னைச் சிந்திக்கத் தூண்டியது. மரணம் என்றால் என்ன? மரணம் எப்படி வருகிறது? மரணம் வந்தபின் இந்த உடல் என்ன ஆகும்? என்றெல்லாம் சிந்தித்தேன். இந்த உடல் இறக்கும். அந்த நிகழ்ச்சியை உடனடியாக நாடக பாணியில் செயற்படுத்தினேன். கைகளையும் கால்களையும் விறைப்பாக நீட்டிக் கொண்டேன். உடல் உறுப்பு எதனையும் அசைக்காமல் மரக்கட்டைபோல் வைத்துக் கொண்டேன். வாயை இறுக்கமாக மூடிக் கொண்டேன். மூச்சு விடுதலையும் நிறுத்திக்கொண்டேன். வாயிலிருந்து எந்த ஒலியும் வெளிப்படாதவாறு உதடுகளை இறுக்கிக்கொண்டேன்.

இறந்த இந்த உடலை என்ன செய்வார்கள். என்று யோசித்தேன். இறந்த உடலை மயானத்திற்கு எடுத்துச் சென்று எரிப்பார்கள். உடல் சாம்பலாகும். இந்த உடல் அழிந்தவுடன் நான் இறந்து விட்டேனா?

**நான்,** என் உடலைவிட்டு நீங்கி நிற்கும் **நான்,** உணர்வுமயமான **நான்,** உடல் இருக்கும்வரை உடலோடு

ஊடுருவி உடல்மயமான **நான்,** உடல் மறைந்தபின்பு என்ன ஆகிறது. தூல உடல் இறக்கிறது. இறப்பு ஆன்மாவைத் தீண்ட முடியாது. ஆகவே நான் இறப்பில்லாத ஆன்மா. மிகத் தெளிவான உயிர்ப்புள்ள உண்மைபோல் பளிச்சென்று இது எனக்குப் புலப்பட்டது. நான் என்பது மிகவும் உண்மையானது. உடலோடு சம்பந்தப்பட்ட எல்லா உணர்வுள்ள செயற்பாடுகளும் இதனை மையமாகக் கொண்டவை. மரண பயம் உடனடியாக மறைந்து போனது. அந்தக் கணத்திலிருந்து நான் யார்? என்ற விசாரணையில் இறங்கிவிட்டேன்.



மேற்படி மாற்றங்கள் ஏற்பட்டபின்னர் வெங் கட்ராமன் தனிமையில் இருந்து தியானம் செய்யத் தொடங்கினார். சுற்றத்தார் நண்பர்கள் மீதிருந்த பற்றுதலை ஒதுக்கி விட்டார். படிப்பில் மனம் செல்லவில்லை. சாப்பிட வேண்டும் என்பதற்காகச் சாப்பிட்டார். மதுரை சுந்தரேஸ்வரர் ஆலயத்துக்கு தினமும் சென்று வணங்கிப் பேரானந்த உணர்வு பெற்றார். 1886 ஆகஸ்டில் ஒருநாள் பாடசாலையில் ஆசிரியரும் வீட்டில் தமையனாரும் பாடங்களைப் படிக்கவில்லை என்பதற்காக கண்டித்தனர். மதுரையில் இருப்பதில் அர்த்தமில்லை என்று வெங்கட்ராமன் எண்ணினார்.

1886 ஆகஸ்டு 29 ஆம் திகதி ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார். என்னுடைய தந்தையாரைத் தேடிப் புறப்பட்டு விட்டேன். என்னுடைய இறவாத் தந்தையின் முக்காலத் தந்தையாரின் உலகின் மூலமுதல்வனின் ஆணைப்படியே வீட்டை விட்டுப் புறப்படுகின்றேன். ஆம்- இனி என் தந்தை அவன்தான். இனி என்னை யாரும் தேடவேண்டாம். தேடுதலுக்காகப் பொருட் செலவும் செய்ய வேண் டாம். என்று கடிதத்தில் கண்டிருந்தது.

திருவண்ணாமலை, இந்துக்களின் தலை சிறந்த புண்ணிய சேத்திரங்களுள் ஒன்று. இங்கு இறைவனை ஒளி வடிவில் மக்கள் வழிபடு கிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறை இங்கு மலையுச்சியில் புனித தீபம் ஏற்றப்படுகிறது. இத்

தீபத்தைத் தரிசிக்க மக்கள் ஆயிரக் கணக்கில் செல்கின்றார்கள். திருவண்ணாமலை எங்குள்ளது. எவ்வாறு சென்று அடைவது என்று தெரியாத நிலையில் பல சிரமங்களின் மத்தியில் 1886 செப்ரெம்பர் முதலாந்திகதி திருவண்ணாமலை சென்றடைந்தார். அருணாலேஸ் வரரிடம் வணங்கி நின்றார்.

தந்தையே உனது அழைப்புக்குப் பணிந்து எல்லாவற்றையும் துறந்து இங்கு வந்துள்ளேன். நான் ஒரு வரமும் கேட்கவில்லை. எந்த இழப்புக்கும் புலம்பவில்லை. என்னை ஏற்று உன்னுடையதாக்கு. என்று பிரார்த்தித்தார். காதிலிருந்த கடுக்கன், தலைமுடி பூணூல் என்பவற்றை துறந்து கோவணத் துண்டுடன் ஒரு யோகி போல் தியானத்தில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் கோயிலுக்குச் சென்று அருணாசலேஸ் வரரை வழிபட்டு வந்தவர் பின்பு அவ் வழக்கத்தைக் கைவிட்டார். மலையில் பல குகைகள் இருந்தன. தன் விருப்பம் போல் பல குகைகளிலும் வசித்து வந்தார். அவரைச் சுற்றிப் பக்தர்கள், சிஷ்யர்கள், உதவியாட்கள் என்று சேர்ந்தனர். ஆனால் ஆரம்ப காலத்தில் அவர் எவ்வளவோ இடர்ப்பாடு களையும் சோதனைக ளையும் சந்தித்தார். எல்லாவற்றையும் ஒருவாறு சமாளித்தார்.

ஒன்றரை வருடமாக பெற்றோர் குடும்பத்தினர் எல்லோரும் வெங்கட்ராமனைதேடிக் கொண்டேயிருந்தனர். 1898ஆம் ஆண்டு மே மாதம் ஓராம் திகதி வெங்கட்ராமன்

## நற்செய்தி

**பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத்தின் பணிகள் தேசிய ரீதியாக, தேசிய பிரித்தானிய லொத்தர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு தமிழ்ப்பாடப் புத்தக அச்சுச் செலவுக்காகவும், கலாச்சார இசைக்கருவிகள் வாங்கவும் 32940 பவுண்கள் (£32940) வழங்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்.**

திருவண்ணாமலையில் யோகியாக இருக்கும் செய்தியை மாமன் நெல்லையப்பர் கேள்விப்பட்டார். உடனடியாக அங்கு சென்றார். அவருடைய கொள்கைக்கோ துறவுக்கோ மௌன விரதத்துக்கோ ஆன்மீக வாழ்க்கைக்கோ பாதிப்பு ஏற்படாமல் தாம் நடந்து கொள்வோம் எனவும் எல்லாப் பணிகளையும் செய்வதாயும் மானா மதுரையில் ஒரு பெரிய மகான் வாழ்ந்த இடத்தில் வந்து தங்குமாறும் எவ்வளவோ கூறிக் கெஞ்சிப் பார்த்தார். பாலயோகி எதையும் காதில் வாங்காமல் கற் சிலை போன்று அமர்ந்திருந்தார். தனது மருமகன் உற்றார் உறவினர் என்ற நிலைகளைக் கடந்து பெரிய முனிவராகி விட்டார், அவரை அழைத்துப் போகமுடியாது என்ற முடிவுக்கு வந்தார். திருச்சுழிக்குச் சென்று நடந்தவற்றைக் கூறினார்.

தாயார் மகன் கிடைத்துவிட்டதாக மகிழ்ந்தார். தான் சென்று அழைத்தால் தன்னுடன் வந்துவிடுவார் என்று எண்ணினார். மூத்தமகன் நாகசுவாமியுடன் திருவண்ணாமலை சென்றார். கந்தல், கோவணம், குளிக்காத அழுக்கேறிய உடல், அழுக்கேறிய சடை, நீண்டு வளர்ந்த விரல் நகங்கள் இவற்றுடன் தவக்கோலத்தில் மகன் படுத்திருப்பதைப் பார்த்து மகனை அன்போடு அழைத்தார். தன்னோடு வரும்படி கேட்டார். அழுதார். தாய் அழுததும் மகனான யோகி அந்த இடத்தைவிட்டு எழுந்து சென்று விட்டார். ஓரிரு நாட்களின்பின் மீண்டும் தாயார் தன்னுடன் பேசும்படி தன்னுடன் வரும்படி கெஞ்சினார். ஆனால் யோகி கல்போன்று அமர்ந்திருந்தார். தாயார் அருகிலிருந்தோரிடம் தன் துயரைக் கூறி அவர்கள் உதவியை வேண்டினார்.

பச்சையப்பிள்ளை என்ற பக்தர் சுவாமி! தங்கள் தாயார் அழுது கேட்கிறார்கள், கெஞ்சுகிறார்கள். தாங்கள் ஒரு வார்த்தை தாயாருக்காகவாவது வாய் திறந்து பேசக் கூடாதா? பேசாவிட்டாலும் பரவாயில்லை இதோ காகிதமும் பென்சிலும் இருக்கின்றன. தங்களின் பதிலை அதில் எழுதியாவது காண்பிக்க வேண்டுகிறோம் என்று பணிவாக விண்ணப்பித்தார். சுவாமிகள் காகிதத்தை எடுத்து அதில் அவரவர் முன் வினைப்படி அதற்கானவன் அங்கிருந்து ஆட்டுவிப்பான். என்னதான் முயற்சி செய்தாலும் நடக்காது என்னும் செயல் நடக்காது. நடக்கும் எனும் செயல் என்ன தடை போட்டாலும் நடந்தே தீரும். இது திண்ணம். ஆதலால் மௌனமாக இருத்தலே நல்லது என்று எழுதிக் கொடுத்தார். இதனைப் பார்த்தபின் சுவாமிகளின் தாயாரும் சகோதரரும் வேறு வழியின்றி மனச் சுமையுடன் வீடு திரும்பினர்.

( தொடரும்....)

# சைவ நீதி ஆசிரியர் கௌரவிக்கப்பட்டார்




கனடாவிலிருந்து வெளிவரும் சைவநீதி. சஞ்சிகையின் ஆசிரியர் புலவர் வீ.வ.நல்லதம்பி அவர்கள் கனடா இந்து மாமன்றத்தினால் இலக்கிய சமூக சேவைக்கான விருது வழங்கி கௌரவிக் கப்பட்டார். அவருடைய சேவையைப் பாராட்டி மேன்மேலும் சைவத்திற்கும் தமிழுக்கும் அவர் அளப்பரிய சேவைசெய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல முருகப் பெருமானை கலசம் ஆசிரியர் குழுவின் சார்பிலும் வாசகர் சார்பிலும் வேண்டிக் கொள்கிறோம்.

வாசகர்களிடமிருந்து தரமான கட்டுரை கவிதைகளை எதிர்பார்க்கிறோம். சமய சம்பந்தமாக எழுதி அனுப்புங்கள். தரமானவற்றை நிச்சயம் பிரசுரிப்போம். அடுத்த கலசம் தைப் பொங்கல் இதழாக வெளிவரும். ஆதலால் உங்கள் ஆக்கங்களை நவம்பர் மாதம் 20ம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.

- ஆசிரியர்

# MARKANDAN & CO

## SOLICITORS

*Empowered to Administer Oaths*

Legal Aid

TAMIL HOUSE
720 ROMFORD ROAD
MANOR PARK
LONDON E12 6BT

**M. MARKANDAN LLB**

* All aspects of immigration matters to appeals to European court of human rights * All types of conveyancing* Litigations * All courts civil/criminal * Landlords/Tenant matters * Matrimonial * Police station advice * all D.S.S and housing benefit matters *Free advice for 15 minutes on the first attendance

**TEL : 0181 514 8188 FAX : 0181 514 8303**

VARSHI'S SUPER STORE

# VARSHI'S SUPER STORE

லண்டனில் உங்கள் வீட்டுத் தேவைகளுக்கான இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், மற்றும் ஓடியோ, வீடியோ, சீடீக்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

**தேசிய லாட்டரிச் சீட்டுகளும் விற்பனையாகின்றன.**

**FIRST AND THE BEST TAMIL SHOP IN NEW MALDEN**

**99, BURLINGTON ROAD, NEW MALDEN, SURREY KT3 4LR**

**TEL : 0181 336 0061**

# ஞானக் கவிதைகளும் மோனச் சிலைகளும்

- தமிழரசி -

## நான்முகன் இன்னம் தரலாமே

தனக்கு ஒப்பார் யாருமற்ற ஓவியக் கலைஞன் நான்முகன். எத்தனைகோடி யோனி பேதங்கள் இந்த உலகில். அவற்றின் சிருஷ்டி கர்த்தா நான்முகன்தானே? அவனால் படைக்கப்பட்டவள் சீதை. **சொல்லும் தன்மைத்து அன்று அது குன்றும் சுவரும் திண்கல்லும் புல்லும் கண்டு உருக பெண்கனி நின்றாள்.** அவளின் அழகை வருணிக்க முடியாது. சடப் பொருட்களான குன்றும், கல்லும், பார்த்து பரவசப்பட்டு உருக நிற்கின்றாள். இதைக் கம்பன் பார்த்தான்.

**"......... இவள் ஒப்பாள் ஒரு பெண்ணை தரும் தான் என்றால் நான்முகன் இன்னம் தரலாமே.."**

இவளைப்போல் ஒரு பெண்ணை படைக்க முடியுமென்றால் நான்முகன் இன்னும் பல பெண்களை படைத்துத் தரலாமே என்று கூறுகின்றாள்.

இப்படியும் பெண்கள் இருப்பார்களா? என்று இப் பாடல்களை படிப்போருக்கு கேட்கத் தோன்றும். கம்பன் காட்டும் கவின் அழகிலும் மேலான அழகுள்ள பெண்களைக் காணவேண்டுமானால் நாம் **குழுலூதும் பிள்ளை கோயிலுக்கு (ஸ்ரீரங்கம்)** போக வேண்டும்.

அப்பரின்

**முன்னை அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்**
**பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை**
**தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே**

வாக்குக் கமைய தன்னை மறந்த நிலையில் தன்நாமம் கெட்டவளாய், அரங்கத்து அம்மானின் அரவணைப்புக்கு ஏங்கி, முகத்திலே நாணம் மேலிட தலையை சற்றுத் தாழ்த்தி, சிற்பத்தின் எழிலிலே அவளாக ஒரு பெண்பாவை நிற்கின்றாள். இவளை மட்டுமல்ல இன்னும் பல பெண்களை இக் கோயிலின் கருவறையின் புறச் சுவரில் பார்க்கலாம்.

**சிறையாரும் மடக்கிளியே மிங்கேவா தேனொடுபால்**
**முறையாலே யுனத் தருவன் மொய்பவளத் தொடுதரளந்**
**துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும் இளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே**

என்ற சம்பந்தர் தேவாரப் பாடலுக்காக கிளியிடம் கொஞ்சுவதுபோல் இன்னொரு நங்கை நிற்கின்றாள். வலக்கையில் தாமரை மொட்டை பிடித்திருக்கும் விரல்களில் அமர்ந்து கிளி கொஞ்சுகின்றது. இடக்காலை அவள் கைவிரல்களில் ஊன்றி வலக்காலை மடித்து அவள் கூறுவதை மிகக் கவனமாகக் கேட்கும் பாவனையில் இக்கிளி நிற்கின்றது.

அவள் அருகில் கீழே சங்கிலிக் கூட்டிற்குள் மற்றுமொரு கிளி அதுவும் அவள் என்ன சொல்கின்றாள் என்பதைக் கேட்பது போல் அவள் முகம் நோக்கி நிற்கின்றது.

அவள் இருக்கும் இடமோ குழலூதும் பிள்ளை கோயில். எனவே நிச்சயமாக இளம் பிறையாளன் திருநாமத்தை சொல்லுமாறு கிளியிடம் கேட்டிருக்க மாட்டாள்.

ஆயர் பாடியில் கண்ணன் செய்த அற்புதங்களை சொல்லு கிளியே! என்றே கேட்டிருப்பாள். அவள் என்னகேட்டாள் என்பதை

**கல்எடுத்துக் கல்மாரி காத்தாய்! என்றும்**
**காமரூபூங் கச்சியூரகத்தாய்! என்றும்**
**வில் இறுத்து மெல்லியல் தோள் தோய்ந்தாய்! என்றும்**
**மல் அடர்த்து, மல்லாரை அன்று அட்டாய் என்றும்**
**மாகீண்ட கைத்தலத்து என் மைந்தா! என்றும்**
**சொல் எடுத்துத் தன்கிளியைச் சொல்லே என்று**
**துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே**

நாலாயிரத்துத் திவ்விய பாடல் எமக்கு எடுத்துரைக்கின்றது.

இவளுக்கு அருகே இன்னொருத்தி அவளோ பெரியாழ்வார் பாடலுக்கு விளக்கமாக நிற்கின்றாள். இடப்பக்கமாக இடுப்பை ஒடித்து வலப்புறம் சரிந்து நின்று இடக்கைக் கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்து வலக்கையால் தன் நெற்றியில் திலகம்

இடுகின்றாள். முகத்தில் காவியம் கதை சொல்ல அவள் நிற்கும் பாங்கு பார்ப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும். கண்ணாடி காணும் காரிகையை பெரியாழ்வாரின் பாடலின் துணை கொண்டு சிற்பி செதுக்கினான் போலும்.

**காரை பூணும் கண்ணாடி காணும்**
**தன் கையில் வளை குலுங்கும்**
**கூரை உருக்கும் தன் கொவ்வைச்**
**செவ்வாய் திருத்தும்**

இவர்களுக்கும் சற்று அப்பால் இரு இளமங்கையர்கள் வீணை ஏந்தி நிற்கிறார்கள். கரங்களால் வீணையை மார்மேல் தாங்கி இடக்கரத்தில் விரலால் அதை மீட்டுகின்றாள்.


வலக்கையும், வீணையின் நடுப்பகுதியும் உடைபட்டு இருப்பினும் மங்கையின் முகத்தில் இருக்கும் உயிர்த்துடிப்பு அவள் அழகைப் பருகச் சொல்கின்றது. திருமங்கையாழ்வார் கூறிய,


**கல் உயர்ந்த நெடுமதின்சூழ் கச்சிமேய**
**களிறு! என்றும் கடல்சூழ்ந்த கனியே என்றும்**
**அல்லியம் பூ மலர்ப் பொய்கை பழன வேலி**
**அணி அழுந்தூர் நின்று உகந்த அம்மான்! என்றும்**
**சொல் உயர்ந்த நெடு வீணை முலைமேல் தாங்கி**
**தூமுறுவல் நகை இறையே தோன்ற நக்கு**
**மெல் விரல்கள் சிவப்பு எய்தத் தடவி ஆங்கே**
**மென்கிளிபோல், முகமிழற்றும் என்பேதையே**

போல் நிற்கின்றாள்.


இந்தப் பெண்களின் தலை அலங்காரங்களும் ஆடைஆபரணங்களும் ஒப்பனைக் கலையை எப்படி அன்றைய பெண்கள் பேணினார்கள் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றன.

நான்முகனால் சீதையைத் தவிர கம்பன் கேட்டதுபோல் பல பெண்களைத் தர முடியவில்லை. ஆனால் குழலூதும் பிள்ளை கோயில் சிற்பியால் சீதையை விட அழகு சிந்தும் வனிதையரை படைக்க முடிந்திருக்கின்றது. சிற்பியின் சிந்தையின் நிறைவை மோனச் சிலைகளில் காண்கின்றோம்.






# கிழக்கு இலண்டன் நியூஹாம் பகுதியில்
## Dental Surgery சம்பந்தமான சகல பிரச்சனைகளுக்கும் அணுகவேண்டியவர்.



டாக்டர் டேவிட் V. பழனிவேல்

* Restorative Dentistry
* Prosthetics
* Orthodontics
* Endodontics &
* Surgical Dentistry

127, Greengate Street, London E13 0BG.

**Tel: 0181 472 9429**

# விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்.

- க. கந்தசாமி



**விநாயகனே வெவ்வினையை**
**வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை**
**தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கு மண்ணிற்கு**
**நாதனுமாந்**
**தன்மையினால் கண்ணிற்**
**பணிமின் கசிந்து**

நாம் வழிபடும் தெய்வ வழிபாடுகளுள் விநாயக வழிபாடு முதன்மை வாய்ந்தது. ஆதிகாலந்தொட்டு இவ் வழிபாடு நடைபெற்று வருவதுடன் உலகெங்கும் பரவியும் உள்ளது.

நாம் எக்கருமம் தொடங்கும் பொழுதும் விநாயகரை வழிபட்டே தொடங்குகின்றோம். எழுதத் தொடங்கும் பொழுதும் பிள்ளையாரை நினைந்து வணங்கி உ இட்டே எழுத ஆரம்பிக்கின்றோம். இதன் அர்த்தம் யாது? என்று நோக்கினால் நாம் செய்யும் எக்கருமமும் விநாயகரின் கருணையால் இடையூறு இன்றி நிறைவேறும் என்பதேயாகும்.

பிள்ளையார் ஞானக்கொழுந்து. உலக வாழ்விற்குரிய கல்வி, செல்வம் யாவற்றையும் நல்குபவன்.

விநாயகர் ஓங்கார தத்துவத்தின் வடிவம். ஓம் என்ற ஒலியிலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன. நிலைபெறுகின்றன. ஒடுங்குகின்றன. பிரணவத்தின் முழுவடிவே வலம்புரி விநாயகர்.

இவரையே பிரணவ மூர்த்தி என்றும் ஓங்கார மூர்த்தி என்றும் அழைப்பர். வலது கையில் அங்குசமும் இடது கையிற் பாசமும் தரித்து, கீழ் வலது கையிற் தந்தமும் இடது கையில் வரத முத்திரையும், தும்பிக்கையில் மோதகமும் தாங்கி பத்மாசனத்தில் வீற்றிருப்பர். இப்படியே பெரும்பாலும் கோயில்களிற் பிரதிஷ்டை செய்யப்படுகின்றது.

இடத்திற்கிடம் வெவ்வேறு உருவங்களில் படிமங்கள் செய்யப்படுகின்றன. முருகப் பெருமானே விநாயகரை இலக்க விநாயகர் என்னும் பெயரிட்டுப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்று அறிகின்றோம். எனவே விநாயக வழிபாடு மிகச் சிறந்த ஒன்றே!

நாம் வீடுகளில் சாணி, மஞ்சள்மா, அறுகம்புல் என்பவற்றால் விநாயகரின் திருவுருவைச் செய்து வழிபடுகின்றோம். இஃது விநாயகருக்கே உரிய தனித்துவமான வழிபாடு.

மார்கழி மாதம் பிறந்தால் வைகறையில் எழுந்து ஸ்நானம் செய்து, வீட்டு வாசலிற்கு நேரே முற்றத்தை மெழுகிக் கோலமிட்டு, சாணத்தினால் பிள்ளையார் பிடித்து வைத்து வணங்குவர். இப்படி மார்கழி முப்பத்தொருநாளும் செய்வர். தைத்திருநாளன்று பொங்கிப் படைத்து மோதகம் செய்து படைப்பர். மஞ்சள் மாவினால் பிள்ளையாரைப் பிடித்து வைத்து வணங்குவர். சூரிய நமஸ்காரமும் செய்வர். மார்கழிப் பிள்ளையார் எல்லாவற்றையும் குளத்தில் இடுவர். இது பிள்ளையாருக்கு வீடுகளிற் செய்யப்படும் சிறப்பு வழிபாடாகும்.

விநாயகருக்கு உரிய விரதங்களில் வைகாசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமை

(சுக்கிரவாரம்) ஆவணிமாத்தில் வரும் விநாயக சதுர்த்தி கார்த்திகைத் தீபத்திற்கு அடுத்த நாள் ஆரம்பமாகும் விநாயக சஸ்டி. விநாயக சதுர்த்தி விரதத்தை ஆவணிமாத விநாயக சதுர்த்தியில் இருந்து ஆரம்பித்து மாதந்தோறும் வரும் சதுர்த்தியை அனுஷ்டிக்கலாம். சதுர்த்தி விரதத்தை பகலில் நோன்பிருந்து விநாயகரை வழிபாடாற்றி இரவில் பால்பழமோ, பலகாரமோ உண்ணலாம். விநாயக சஷ்டி விரதத்தைக் கார்த்திகைத் தீபத்திலன்று விரதமிருந்து ஆரம்பிக்கவேண்டும். இவ்விரதம் தொடர்ந்து இருபத்தொருநாள் அனுஷ்டிப்பது. இந் நாட்களில் பிள்ளையார் கதை என்ற நூலை வாசிக்கவேண்டும். விநாயகரின் அருட்பாக்களை ஓதுவதுடன் அவரின் திருவுருவை மனதில் இருத்தி வழிபாடு செய்தல் வேண்டும். இறுதிநாள் ( பிள்ளையார் பெருங்கதை) நோன்பு இருந்து மறுநாள் விரதத்தைப் பூர்த்தி செய்தல் வேண்டும். இயன்றளவுக்கு ஏழைகட்குத் தானம் செய்தல் வேண்டும்.

விநாயகரை அறுகம்புல் கொண்டு அர்ச்சிப்பது மிகச் சிறந்த வழிபாடாகும். இவ்வர்ச்சனை ஏழைகளாலும் செய்யக்கூடிய ஒன்றாகும். வசதிக்கேற்ப 21, 108, 1008 அறுகை எடுத்து (3அல்லது5 புல் உள்ளதாக) கழுவி அர்ச்சித்தல் வேண்டும். இவ்விரண்டு அறுகாக எடுத்துச் சந்தனத்தில் தோய்த்து அர்ச்சிப்பது மிக விசேட வழிபாடாகும். வில்வத்தினாலும் விநாயகரை அர்ச்சிக்கலாம். பிள்ளையார் விரும்பி உவப்பது மோதகம்

ஔவையார் நம்பியாண்டார் நம்பி விநாயகரை உள்ளன்புடன் பூசித்துப் பெருவாழ்வு பெற்றார்கள். வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்.



## குறித்துவைக்கவேண்டிய தினங்கள்

| | |
|---|---|
| 12-10-97 | ஏகாதசி விரதம் |
| 13-10-97 | பிரதோஷ விரதம் |
| 14-10-97 | நடேஷரபிஷேகம் |
| 15-10-97 | பூரணை விரதம் |
| 18-10-97 | ஐப்பசி மாதப் பிறப்பு |
| 24-10-97 | ஐப்பசி வெள்ளி 1 |
| 27-10-97 | ஏகாதசி விரதம் |
| 28-10-97 | பிரதோஷ விரதம் |
| 30-10-97 | தீபாவளி |
| 31-10-97 | ஐப்பசி வெள்ளி 2, அமாவாசை விரதம் |
| 01-11-97 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| 04-11-97 | சதுர்த்தி விரதம் |
| 06-11-97 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| 07-11-97 | ஐப்பசி வெள்ளி 3 |
| 10-11-97 | உத்தான ஏகாதசி விரதம் |
| 12-11-97 | பிரதோஷ விரதம் |
| 14-11-97 | ஐப்பசி வெள்ளி 4, பூரணை விரதம் |
| 16-11-97 | கார்த்திகை மாதப்பிறப்பு |
| 17-11-97 | சோமவாரம் 1 |
| 24-11-97 | சோமவாரம் 2 |
| 25-11-97 | ஏகாதசி விரதம் |
| 27-11-97 | பிரதோஷ விரதம் |
| 29-11-97 | அமாவாசை விரதம் |
| 01-12-97 | சோமவார விரதம் 3 |
| 03-12-97 | சதுர்த்தி விரதம் |
| 05-12-97 | ஷஷ்டி விரதம் |
| 08-12-97 | சோமவார விரதம் 4 |
| 10-12-97 | ஏகாதசி விரதம் |
| 11-12-97 | பிரதோஷ விரதம் |
| 12-12-97 | திருக் கார்த்திகை விரதம் |
| 13-12-97 | பூரணை விரதம் |
| 14-12-97 | விநாயக விரத ஆரம்பம் |
| 15-12-97 | சோமவார விரதம் 5 |

தொகுப்பு: அமுதா

# தமிழில் அர்ச்சனை! எத்தமிழில் ?

பண்டிதர் மு. கந்தையா (ஏழாலை மேற்கு, சுன்னாகம்)

சிவாலயங்களில் விளங்கா மொழியில் எல்லாம் நடைபெறுகின்றன. வழிபடுவோர் மொழியில் அவை நிகழ்ந்தால் அவர்கள் விளங்கிப் பயன் கொளல் கூடும் என்ற சிந்தனை சில காலமாக இருந்து வருதல் கண்கூடு. இதன் சாதக பாதகங்கள் குறித்துச் சைவத் தமிழறிஞர் மத்தியில் வெகுவாகச் சிந்திக்கப்பட்டு வருவதும் கண்கூடு.

எங்கள் சிவாலயக் கலை முற்றிலும் மந்திர தந்திரக் கிரியை மயமாயிருப்பது. இம் மந்திர தந்திரக் கிரியைகள் சாமானிய தரத்தினரின் கிருதிகளாகா. அவை சாமானிய பகுத்தறிவு நிலை தாண்டி சிவதத்துவ அறிவில் நிலைபெற்ற ஆன்றோர்க ளாலானவை. அவர்களும் சுயமாகப் புத்தி பண்ணிப் படைத்துக் கொண்டவை அல்ல. அவர்களின் சிவத்துவ விளக்க நிலைக்கியல்பான திருவருள் வாக்குகளாக உள்ளவை அவை. அதனால் அவற்றையடக்கிய நூல் ஆகமம் எனப்பட்டது. ஆகமம் என்றால் வந்தது. வந்தது என்றால், சிவத்துவ அறிவில் நிலைபெற்ற அச் சான்றோர்களின் ஞான விளக்கத்தில் தானாக உதித்தது என்றாகும். காட்சி வகையிலும் சரி கருத்து வகையிலும் சரி அவை கூறும் விடயங்கள், அதி உயர் தரமெனக் கணிக்கப்படக்கூடும். எந்த ஒரு மனித அறிவு மட்டத்தையும் விஞ்சியனவாயிருத்தலாலும் மெய்ஞ்ஞான நூல்கள் சொல்லுந் திருவருள் விளக்க அநுபவ நிலைகளுக்கு வழி நடத்துஞ் சாதனங்களாயி ருத்தலாலும் அவை எவரொருவராலும் புத்தி பண்ணிச் செய்யப்படாது, ஆன்றோர்க்கியல்பான திருவருளுணர்வில் தாமாக வெளிப்பட்டவை என்பதை ஒத்துக் கொள்வதைவிட மறுப்பது மகா கஸ்டம் எனும் நிலையுண்டு. அங்ஙனம் வெளிப்பாடான அவையனைத்தும் இன்று நாம் சமஸ்கிருதம் என அழைக்கும் மொழியில் அமைந்தவை. அம்மொழியில் அமைந்ததற்கான காரணம் பின்வருமாற்றால் விளங்கும்.

ஆகமங்கள் கூறும் கிரியைகளில் முக்கிய இடம் வகிப்பன மந்திரங்களும் அவற்றின் பீஜங்களும். மந்திரங்கள் தமக்கென அமையும் விசேட ஒலிகளோடு கூடியவை. அத்துடன் அவ்வொலிகளின் மூலங்களாயுள்ள நாத அசைவுகளின் சேர்க்கையால் ஆற்றலூட்டப்படுபவை. அத்தகைய நாத அசைவுகளின் சேர்க்கையே மந்திர பீஜம் எனப்படும். இயந்திரமொன்றின் இயக்கத்திற்கு அவசியமான மின்சக்தியைத் தந்துதவும். மின்கல அடுக்கு(Battery) மூல மந்திரம். ஆற்றல் பெறுதற்கு இன்றியமையாத நாத சக்தியைத் தந்துதவுவன பிற மந்திரங்கள். குறித்த மந்திரங்கள் பீஜங்களிற் சம்பந்தப்படும் விசேட ஒலிகள் மற்றெம் மொழிக்குமில்லாத வகையிற் சமஸ்கிருத மொழிக்கே தனித்துவமானவை. சிவயோகிக ளுக்குத் தரிசனமாகும் ஆறாதாரங்களிலுமிருந்து 51 ஒலிகள் தோன்றும் விபரம் திருமூலரால் திருமந்திர நூலில் விளக்கப்பட்டுள்ளது. பிற மந்திர ஆற்றல்களும் அங்கு விளக்கப்பட்டுள்ளன. குறித்த ஐம்பத்தொன்றில் 26 ஒலிகள் சமஸ்கிருதத்துக்கு மட்டுமே உரியவை. குறித்த விசேட ஒலிகள் பூசைக்கிரியைகளின் பலப்பேற்றுக்கு மிகவும் உபகாரமானவை. அவ்வொலிகள் தாம்தாம் தோன்றும் ஆதாரஞ்சார்ந்த நரம்புகள் நாடிகளை இழுத்தியைத்தல் மூலம் பூசையில் அத்தியாவசியமெனப்படும் மன ஒடுக்கத்தை விளைவிப்பதால் அது கைகூடு வதாகும். ஆதலால் இப் பெரும் பயனை முன்னிட்டு அவ்வொலிகளின் தாயகமான சமஸ்கிருத மொழியிலேயே பூசை மந்திர தந்திர விதிகள் அமையலாயின.

மேலும் விசாரிக்கையில், சிவாலயங்களில் வழிபாட்டுக்கென இருக்கும் மூர்த்திகள் கும்பாபிஷேகம் என்ற பெயரில் நிகழும் மந்திர தந்திரக் கிரியை விசேடங்களினால் உருவுந்திருவும் கொடுத்தமைக்கப்பட்ட மந்திர மூர்த்திகள். அன்று அவற்றில் உருவாக்கப்படும் மந்திர சாந்நித்தியம் என்றும் நின்று நிலவ வேண்டித் தொடர்ந்து நிகழ்த்துவதே ஆலய நித்திய நைமித்தியங்கள். சில விசேடகிரியைகள் தவிர கும்பாபிஷேகத்தில் தழுவப்பட்ட கிரியாம்சங்கள் பலவும் ஒவ்வோரளவிற் சுருக்கமான முறையில் நித்திய நைமித்தியங்களிலும் இடம் பெற்று வருதல் கண்கூடு. அதனாற்

கும்பாபிஷேகரீதியிற் பிரதிஷ்டையான சிவாலயங்களின் நித்திய நைமித்தியங்கள், அதற்கு ஊடகமாயிருந்த சமஸ்கிருத மொழியிலேயே நடைபெற்றாக வேண்டும் என்பது அறிவியலாளர் நோக்கு.

இனி ஆன்றோர் காட்சியில் மந்திர தந்திர விதிகள் சமஸ்கிருதத்தில் வெளிப்பட்டிருத்தற்குச் சமசீராக நமது சைவ சமயாசாரியர் காட்சியில் சில துதிகள் தமிழில் வெளிப்பட்டிருப்பதுமுண்டு. அவை எங்ஙனம் திருவருட் காட்சியாயமைந்தனவோ இவையும் அங்ஙனமான திருவருட் காட்சியாய மைந்தன. அவை எங்ஙனம் புத்திபண்ணிக் கூறப்படாது ஆன்றோரிடத்தில் தாமாக வெளிப்பட்ட னவோ இவையும் அங்ஙனமே சமயாசாரியார் இடத்தில் தாமாக வெளிப்பட்டவை. தேவாரம், திருவாசகம் என்பனவாகச் சொல்லப்படும் அவற்றிலேயே இதற்கத்தாட்சியுமுண்டு. அஃதிருக்க சிவாலய பூசையின் பல்வேறு அம்சங்களிலொன்று அர்ச்சனை. அர்சனையின் போது சமஸ்கிருதத்திலுள்ள மந்திரங்கள் பிரயோகம் பெறுதல் கண்கூடு. அம் மந்திரங்கள் அனைத்தும் தெய்வ துதிகள். அவை தோன்றிய ஞானப் பின்னணிக்குக் குறையாத ஞானப்பின்னணியில் தேவார திருவாசகங்களும் தோன்றியமைக்கு வரலாற்று ரீதியான அத்தாட்சிகளும் உள்ளன. அன்றியும் தமிழ் மொழியின் தனித்துவப் பண்பான கனிவு, குழைவுப் பண்புகளைத் தம்பால் ஏகபோகமாகக் கொண்டிருக்கும் சிறப்பும் இவற்றுக்கு உண்டு. அதனால் படிப்போருள்ளத்தைக் கனிவித்துக் குழைவித்துப் பக்திப் பரவச நிலைகளை ஆக்கும் இலாகவத் தன்மை உள்ளனவாகப் பிரசித்தி பெற்றுள்ளவை இத் திருமுறைகள். அவ்வகையாற் பூசைப் பண்பைச் செழிப்பித்துப் பூசைப் பேறான தெய்வீகச் சைவ ஞான விளக்கத்தைப் பிரகாசிப்பிக்குந் தன்மையில் இத் தெய்வத் துதிகளுக்கும் விசேட பங்குளதாகும். பூசைப் பலன் விருத்திக்கு இவற்றையும் ஆதாயப்படுத்தும் முறை ஏலவே சிவாகமங்களில் ஓரளவு இடம் பெற்றுள்ளது. கொடியேற்றத்தில் இடம் பெறுந் தேவ ஆவாஹனம் அதைத் தொடர்ந்து இடம் பெறும் சாந்தி ஆவாஹனம் என்பவற்றிற் பெயர் குறித்துரைக்கப் பட்டிருக்கும் பண்களின் தேவை தேவாரப் பாக்களினாலேயே பூர்த்தி செய்யப்படுகிறது. அத்துடன் பூசையில் அர்ச்சனை முடித்து வேதமோதுதற்கும் ஆசீர்வாதத்திற்கும் இடையில் தமிழ் வேத பாராயணம் திராவிடவேத பாராயணம் என்ற பெயரில் இடம் பெறுகிறது. அதற்கிணங்க சிவாலய பூசைப் பாரம்பரியத்திற் குறித்த அவ்விலக்கில் சிவாசாரியர்கள் தேவாரம் அருளிப்பாட (பாடுக) திருவாசகம் அருளிப்பாடுக என்ற வார்த்தைகளால் வேண்டுதல் செய்தலும் அதைத் தொடர்ந்து பக்தரொருவர். பன்னிரு திருமுறைக் கிரமத்திற் சுருக்க முறையாக ஐந்தோ மூன்றோ இரண்டோ திருமுறைப் பாடல்களை இசைப்பதும் நீண்டகால வழக்கமாயிற்று. இதில் பாடும்படி வேண்டுதற்கு சமஸ்கிருதத்தில் இல்லாத அளவுக்கு மிகப் பொருத்தமானதும் அர்த்த பூர்வமானதுமான ஒரு பதம் தமிழ் வழக்கில் இருக்கக் கண்டு அதற்குரிய மதிப்பளிக்கும் முறையில் அன்றைய சிவாசாரியர்கள் **அருளிப்பாட** என்ற வார்த்தையைப் பிரயோகித்து இருக்கிறார்கள். இந் நூற்றாண்டின் முப்பது நாற்பதுகளிற்கூட சிவாலயங்களில் இது நடைமுறையிலிருந்து வந்தது கண்கூடு. திருமுறைகள் பதிவாக்கு என்றதற் கேற்ப அவற்றை அருளிச் செய்யும்படி பிரார்த்திக்கும் வார்த்தையும் பதிவாக்காகிய பன்னிரண்டாந் திருமுறை வாக்காகவேயமைந்த நயம் போற்றத்தகும். இவ் வார்த்தை அத்திருமுறையில் வெள்ளானைச் சருக்கத்தில் **வென்றி வானவர்க்கருளிப்பாடு** என் நந்தி தேவர் வாக்காக வந்திருத்தல் குறிப்பிடத்தக்கதாகும். சைவத் திருமுறைகள் சிவாலய பூசையின் அங்கமாக இடம்பெற வந்த நிலை இது.

இதன் பின்விளைவென்றே பல வகையிலும் துணியத்தக்க ஒரு வகையில் சிவாலயங்களில் தமிழில் அர்ச்சனை என்ற குரல் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. தமிழ் நாட்டில் திருவையாறு, திருவிடைமருதூர், சீர்காழி, மதுரை முதலாம் இடங்களிலுள்ள பெருஞ் சிவாலயங்களிலும் சமஸ்கிருதத்தில் அர்ச்சனை, தமிழில் அர்ச்சனை என்ற அறிவித்தல் பலகைகள் பக்கம் பக்கமாகத் தொங்குதலைக் காணலாம். சிவாலய பூசை வரலாற்றில் குறிப்பிடத்தகும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு திருப்பம் இதுவெனலாம்.

ஆனால் வெறுமனே தமிழில் அர்ச்சனை என்றிருத்தல் பக்தர்களிடையிற் பலவித எண்ணச் சார்புகளைத் தோற்றுவதாகலாம்.

1. அர்ச்சிப்போர் தமது உணர்வெழுச்சிக்கும் அபிலாசைக்கும் ஏற்பத் தோன்றும் இதமான தமிழ் வார்த்தைகளால் அர்ச்சித்தல்

2. நடைமுறையிலிருக்கும் சமஸ்கிருத மந்திரங்களையே ஒலிமாத்திரத்தால் தமிழ்மயப்பட உச்சரித்து அர்ச்சித்தல்
3. சமஸ்கிருத மந்திரங்களைத் தமிழ் அர்த்தம்பட மொழிபெயர்த்து அர்ச்சித்தல்.
4. பரவல் வழக்கிலிருக்கும் போற்றி, சரணம், வாழ்க என்ற ஈறுகளுடான வார்த்தைகளால் அர்ச்சித்தல்.

என அவரவர் எண்ணச் சார்புகள் வேறுபடலாகும். முதலாவது முறை வரம்பின்றியோடும். இடத்துக்கிடம் வேறுபடும். எல்லாவற்றுக்கும் மேலாக அவை தெய்வீகத்துக்குப் பொருந்தும் மந்திரத் தன்மையற்றனவும் ஆம். எங்ஙனமெனில் விருப்பு வெறுப்பு, ஆசை, மயக்கம் முதலாகிய மனக் குற்றங்கள் அற்றவர்கள் வாக்கு மட்டுமே நிறைமொழி. அதாவது கருதிய பலனைத் தவறாது தரும் மொழியே மந்திரம். சமஸ்கிருதத்தில் மட்டும் அல்ல தமிழிலும் அத்தகையோர் மொழி மந்திரம் என்பது தொல்காப்பியம் தரும் விளக்கம். இம்முதலாவது வகையிற் சம்பந்தப்படுவோர்க்கு அது துர்பலமாதலின் என்க இரண்டாவது முறைவியர்த்தமாகும். எங்கனமெனில் முற்கண்டவாறு ஒலிவிசேடமே சமஸ்கிருதத்தின் உயிர். சமஸ்கிருத மந்திரங்களைப் பொறுத்தமட்டில் அத்தன்மையே மேலும் அதிகமாகும். தமிழுக்கிசைய அவற்றின் ஒலியை மாற்று வதாலகற்றாலாம் பயனும் நழுவா தொழியாதாகலின் என்க. சமஸ்கிருத மந்திரங்கள் பொருள்விளக்கம் தழுவியல்ல ஒலிச்செம்மை தழுவியே உச்சரிக்கப்படுவன. ஒலிவழுவாதிருக்கும் அளவில் தான் அவற்றின் பலப்பேறாதல் கருதத்தகும். அதாவது சமஸ்கிருத மந்திரங்களில் உள்ள சிறப்பொலிகளைப் பொது ஒலிகளாகமாற்றியும் மொழியிலக்கண அமைதியைச் சிதைத்தும் கணபதியே நம, லஷ்மியே நம, என்ற மாதிரியில் பிரசுரமாகும் தமிழர்ச்சனைப் புத்தகங்கள் பயனிலவாம்.

இனி மூன்றாவதுவகை பெரும்பாலும் மந்திரப் பொருளை விபரீதப்படுத்துவதுடன் விசம மாக்குவதாயும் அமையும். லிங்காய நமஹ என்றால் குறிக்கு வணக்கம் என்பதா? துர்க்காய நமஹ என்றால் கோட்டைவாசிக்கு வணக்கம் என்பதா?ச்யாமளாய நமஹ என்றால் கறுப்பிக்கு வணக்கம் என்பதா? இவை சீர்பட வருமாறில்லை. மேல் நான்காவது வகை பரவல் வழக்கிலுள்ள எல்லார் வார்த்தைகளையும் தழுவி முன் இரண்டாவது வகையிற் கருதப்பட்ட மந்திரத்தன்மை முற்றுமற் றொழியும்.

இங்ஙனமாகலின், தமிழில் அர்ச்சனை என்பது மேற்கண்டவாறான குறைபாடுகளுக்கு இட மளிக்காது மந்திரத்தன்மையும் பொருந்தி உயர் பலன் தருவதற்கு உகந்த தமிழ் வார்த்தைகள் கண்டறியப்பட்டாக வேண்டும்.

உலக மொழிகளில் ஏனை மொழிகளைவிடக் கூடுதலான அளவுக்கு ஞான உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மொழி தமிழ் எனப் பொதுவாகக் கருதப்படுகின்றது. அல்பேட்ஸ்வைசர் போன்ற மேதாவிகள் அப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பல்வேறு ஆதாரங்களுண்டு. மெய்ஞ்ஞானமே தன்மயமான சைவ சித்தாந்தக் கருத்தம்சங்கள் தொல்காப்பியம் முதலிய பழந்தமிழிலக்கிய இலக்கணங்களிலும் புறநானூறு முதலிய இலக்கியங்களிலும் விரவியுள்ளன. தொடர்ந்து வந்த காவியங்கள் அறநெறி நூல்களிலும் அவற்றின் செல்வாக்கு மிகுந்திருப்பதைக் காணலாம். பக்தி இலக்கிய காலமெனத் தொடர்ந்த பல்லவர் சோழர் காலத்தில் தோன்றிய திருமுறை இலக்கியங்களில் அவை தம் பூரண நிறைவு நிலையைப் பெற்றுச் சம்பூரணமான சைவஞான விளைவாகப் பரிணமித்துள்ளன. அவ்வாற்றால் சங்கத்தமிழ் சங்கம் மருவிய காலத்தமிழ் என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடும் எவ்வெத் தமிழையும்விட ஞானச் செழுமையும் செப்பமும் ஒருங்கமைந்த பண்பு திருமுறைத் தமிழுக்குளதாயிற்று. இவற்றை அருளிய சமயாசாரியசுவாமிகளது வாழ்க்கை வர லாற்றுண்மைகளும் அவர்கள் பாடல்கள் பொதிந்திருக்கும் அர்த்த விசேடங்களும் இதற்கத்தாட்சியாயுள்ளன. இத் திருப்பாடல் கள்மூலம் இவர்கள் உலகறியப் பகிரங்கமாக விளைத்துள்ள அதிசயங்கள் முழுவதும் இவற்றின் ஞானச் செழுமையைக் காட்டுகின்றன. திருஞானசம்பந்தர், திருமுறைத் தமிழைத் திருநெறிய தமிழ் என்ற மட்டிலமையாது தாம்பாடுந் தமிழைத் தம் திருப்பெயரொடு சார்த்தி சம்பந்தன் செந்தமிழ் எனவும் போற்றியிருத்தல் குறிப்பிடத்தகும். திருநெறி, முத்திநெறி, முத்திநெறியை வழங்கவல்ல தமிழ் - திருநெறிய தமிழ், ஞானசம்பந்தன் தமிழ் மெயஞ்ஞான சம்பந்தத்தை விளைவித்தற்கு உத்தரவாதமுள்ள தமிழ் என்றே உண்மை நோக்கிற் கொள்ளப்படும். சுவாமிகள்

தம் காலத்துத் தமிழ்க் கல்வியிலும் தமிழிலக்கண இலக்கிய ஆக்கங்களிலும் தீவிர முன்னேற்றம் கண்டிருந்த சமணரின் குறைபாடொன்றைச் சுட்டுகையில் அவர்களது தமிழ்க் கல்வியியல்பைச் சுட்டியே அதை உணர்த்தியிருத்தல் இங்கு விசேடமாகக் கருத்தாகும்.

**வாயிருந் தமிழே படித்தானானா ஆயிரஞ் சமணும்** என்பது அவர் அருளிய செயல். இதில் வரும் **வாய் இரும்** என்ற அடைமொழி அவர்கள் தமிழ்ப் படிப்பின் அதிவேகத் தன்மையைக் காட்டும். அவ்வளவுக்குத் தமிழேதான் படித்தார்கள். ஆனால் வாலறிவன் தாளுக்குஆட்படுத்தவெனத் திருவள்ளுவர் குறித்த கல்விப் பயனை எட்டுதற்காம் ஞானத்தரம் அதற்கிலதாயிற்று என்பது சுவாமிகள் அருளிச் செயலின் தாற்பரியம் ஆம்.

அங்ஙனமன்றி சுவாமிகள் ஆரியத்தையெ தீர்க்கும் தமிழபிமான மிகுதி புலப்பட உரைத்தாரென்றோ சமணர் தமிழை இழித்துரைத்தாரென்றோ கொள்வதெல்லாம் பற்றற்ற நிலையதாகிய மெய்ஞானப் பிழம்பாக உணரப்பட்டுவரும் அவரது உண்மைநிலைக் கொவ்வாதனவாம்.

இவ்வாற்றால் ஞானமே தன் பண்பும் பயனுமாயுள்ள சிவாலயபூசையில் தமிழில் அர்ச்சனைக்காந் தகுதி திருமுறைத் தமிழிற்கே உளதாதல் தானே அமையும். இதனைக் கருத்திற்கொண்டு தமிழில் அர்ச்சனை என்ற அறிவித்தல் திருமுறைத்தமிழில் அர்ச்சனை என வரையறுக்கப்படுதல் அவசியமாகும்.

அங்ஙனம் வரையறுக்கப்படும் பட்சத்தில் அர்ச்சனைத்தேவை நோக்கில் திருமுறைகளை நாடிப்பெறும் ஆர்வமும் அவற்றிற் கணிசமான பகுதிகளை மனனஞ் செய்து கொள்ளும் வழக்கமும் அதிகரிக்கும். அர்ச்சனை செய்வோர்செய்விப்போர் எனும் இருபகுதியினர் வாயிலும் திருமுறை வாக்கியங்கள் அதிகமாகப் பயிலும் வாய்ப்புண்டாகும். அதன்மூலம் ஆலயச் சூழலிற் திருமறை நாதஞ் செழித்தோங்கப் பரவலான முறையில் திருமுறையுணர்ச்சி சமூகத்திற் பரவும் சாத்தியமும் உண்டாகும்.

திருமுறைகளில் ஏதொரு பகுதியும் அர்ச்சனைத் தரமுள்ளதாதல் பொது. அவற்றுள் திருநாவுக்கரசு சுவாமிகளின் போற்றித் திருத்தாண்டகங்கள், மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசக அகவல்கள் நான்கு, திருச்சதகத்துப் போற்றிப் பதிகம் முதலானவை அதற்குச் சிறப்பாகும்.

இதனை வற்புறுத்தல் சிவாலய அர்ச்சனையிற் சமஸ்கிருத வழக்கை ஓரங்கட்டுவதாகாது. திருமுறைகளின் யதார்த்த பாவமான ஞானச் செழிப்பை ஆலய மூர்த்தியின் சாந்நித்திய விருத்திக்கும் அதன் பலனாகும் சமூக நலனுக்கும் சாதகமாக்கு மளவேயாம். இரண்டும் சமகாலத்தில் நிகழின் பெரிதும் வரவேற்கப்படும்.


சைவ சமயாசாரியர்களாகிய எம் பெருமக்கள் நோக்கில் சமஸ்கிருதம் தமிழ் இரண்டும் சரிநிகர் சமமானவை. அவர்கள் வாக்குகளிலேயே இதற்கு அத்தாட்சிகள் உண்டு. பக்தர்கள் பிரார்த்திக்கும் தமிழ்ச் சொல்லும் வட சொல்லும் சமத்துவமாகச் சிவன் திருவடிகளிற் சென்றனையக் கண்ட தமது காட்சியைத் திருஞானசம்பந்தர் தம் திரு அச்சிறுபாக்கப் பதிகப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

**தம்மல ரடியொன் றடியவர்பரவ**
**தமிழ்ச் சொலும் வடசொலும் தாள்நிழற் சேர**
**அம்மலர்க் கொன்றை அணிந்த எம்மடிகள்**
**அச்சிறு பாக்கமது ஆட்சிகொண்டாரே**

என்பது பாடல்.

இம்மங்கலக் காட்சி சிவாலயங்கள் தோறும் களைகட்டுதற்கேற்றவகையில் திருமுறைத் தமிழில் அர்ச்சனை எங்கும் இடம்பெறுவதாக.


*****



# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

- மு. நற்குணதயாளன் -


தேவார திருவாசகங்களை மந்திரங்கள் என்று சொல்வாருமுளர். மந்திரங்கள் என்றால் தானாக வந்தவை என்று பொருள்படும். தானாக வந்தவை எனும்போது மனிதன் தன்னுடைய புத்தியைப் பாவிக்காமல் இறைவன் அருளால் மனிதன் ஊடகமாக்கப்பட்டு வெளிவந்தவை எனலாம். இப்படிப் பார்க்கும்போது மாணிக்க வாசகர் கற்றவர் என்பதும் ஒரு நாட்டின் அமைச்சர் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். அதாவது மாணிக்கவாசகர் ஏற்கனவே தமிழைக்கற்றறிந்தவர் எனபது புலனாகிறது. அப்படியாயின் திருவாசகம் மாணிக்கவாசகரிடமிருந்து தானாக வெளிவரவில்லையா என்ற வினாவும் அவர் கற்ற தமிழே கவிதைகளாக வெளிவந்தன என்பதும் முடிவாகிறது. இந்த வகையிலே பார்க்கும்போது மாணிக்கவாசகர் சமூகக் கவிஞனாகவே மீண்டும் தோற்றமளிக்கிறார். இவற்றை வலியுறுத்தக் கூடியதாக இம்முறை திருவெம்பாவையின் மேலும் இரு பாடல்களைப் பார்ப்போம்.



**பைங்குவளைக் கார்மலரால், செம்கமலப் பைம்போதால்**
**அங்கம் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்**
**தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த**
**பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்துநம்**
**சங்கம் சிலம்ப சிலம்பு கலந்து ஆர்ப்ப**
**கொங்கைகள் பொங்க குடையும் புனல் பொங்க**
**பங்கயப்பூம்- புனல் பாய்ந்து ஆடு- ஏல்ஓர்எம் பாவாய்!**

பெண்ணே! இப் பொய்கையானது, நீலோத்பலமலரானது பூத்திருப்பதால் உமாதேவியைப் போன்றும் செந்தாமரை மலர்ந்திருப்பதால் அது சிவபெருமானைப் போன்றும் கொக்குகள் கூட்டம் கூட்டமாக நிற்பதால் அது திருநீறைப் போன்றும் பாம்புகள் நெளிந்துநெளிந்து செல்வதால்இறைவன் பாம்பு அணிந்திருப்பது போன்றும் அழுக்குகளைக் கழுவ வருபவர்கள் கோயிலுக்கு மும்மலத்தை நீக்கவரும் அடியார்களைப் போன்றும் இருப்பதால் இப் பொய்கையானது சிவபெருமானும் உமாதேவியும் இணைந்து வதியும் கோயிலைப் போலல்லவா இருக்கிறது. இப் பொய்கையிலே நீ வளையல்கள் குலுங்க கொங்கைகள் பூரிக்க தண்ணீர் பொங்கி எழ நீராடி மகிழ்வாயாக எனப் பொருள் விளங்குகிறது. பெரியவர்கள் எம்மைப் பார்த்துக் கோயிலுக்கருகில் கேணியிலே முழுகி எழுந்தால் துன்பம் யாவும் போய்விடும் என்பதைக் கூறுவார்கள். கேணியே ஒரு கோயில்தான் என்பது மாணிக்கவாசகரின் பாடல் மூலமாக எவ்வளவு துல்லியமாக விளங்குகின்றது.

( தொடரும்.....)






**JAS Musicals Ltd**

108A The Broadway, Southall Middx. UB1 1QF U.K. Tel: 0181 574 2686 Fax: 0181 571 7445

# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, Off Warple Way, Acton London W3 0RQ
Tel: 0181 740 8379/ 0181 749 0595
Fax: 0181 740 4229 Telex: 929657 Glenca G

* SHIPPING
* AIRFREIGHT
* TRAVEL

ATOL
74395

Main Agents for Airlanka

**UNACCOMPANIED BAGGAGE**
**PERSONAL EFFECTS**
**HOUSEHOLD GOODS**
**VEHICLES MACHINERY ETC.**

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த
சேவையினைப் பெறுவதற்கும் சிறந்த ஸ்தாபனம்

நியாய விலைக்கு இலண்டனில் ஒரே தங்கமாளிகை

# Raju Pattni & Son

தமிழர்கள் விரும்பிச் செல்லும் ஒரே தங்க மாளிகை

**We specialise in 22CT. Gold & Diamond Jewellery**
**Tax Free For Overseas Visitors**

தமிழ் மக்களின் நம்பிக்கையும் நன்மதிப்பும் பெற்ற,
நகை வியாபாரத்தில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்.





அழகான வண்ண வண்ண உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான தாலிக்கொடிகள், நெக்கிலஸ்கள், மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ணங்களில் அமைந்த அட்டியல் வகைகள், பதக்கம் சங்கிலிகள், அழகான டிசைன்களில் கண்களைப் பறிக்கும் தங்க வளையல்கள், சங்கிலிகள் இவை மாத்திரமா? பென்ரன்கள், தோடுகள், இரத்தினக் கற்கள் பதித்த மோதிரங்கள் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரேயொரு நகை மாளிகை.

# ராஜூ பட்னி அன் சன்

**58 - 60 Ealing Road, Wembley, Middx HA0 4TQ**

**Tel: 0181 903 6677, 0181 902 0577, Fax: 0181 903 4887**

பொன்னுருக்குவதற்கு ஏற்ற வசதிகளுமுண்டு.

£2000 க்கு மேல் நகை வாங்கும் உங்களுக்கு £100 நன்கொடைச் சீட்டை இலவசமாக வழங்கக் காத்திருக்கின்றார்கள் ராஜூபட்னி அன் சன் நகை மாளிகையினர்

இன்றே குடும்பத்துடன் விஜயம் செய்யுங்கள்.



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு வாசன் அச்சகத்தினரால் ( Tel: 0181 646 2885)
இலண்டனில் அச்சிடப்பட்டு, சைவ முன்னேற்றச் சங்கத்தால் 31. 10. 97 அன்று வெளியிடப்பட்டது.